பிசுமில்லா இற்றகுமா னிற்றகீம்.

இஃது

இபுனியந்தன்படைப்போர்.

தென்புரவையூர்.

கந்தப்பிள்ளை குமாரர்

அலியார்ப்புலவரவர்கள்

பாடியது.

பேட்டை ஆழூர்

வாலெபாவசாயபு அவர்கள்

குமாரராகிய

அப்துல்காதிர்சாயபு

அவர்களால்

பார்வையிடப்பட்டு

திருநெல்வேலிப்பேட்டை

ச-ஆதம்ராவுத்தரவர்களால்

மார்க்கபுரம்.

முத்துசெட்டியா

ரவர்களது.

ஸ்ரீ-கலிரஞ்சனிமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பவ ௵ மார்கழி ௴

3364

5-2

1-75

3366

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

இஃது

இபுனியந்தன் படைப்போர்.

காப்பு.

வெண்பா.

பூமுதல யாவும் பொற்பா யமைத்தவொரு
மாமுதலே யெங்குநிறை வள்ளலே - கோமகனும்
இபுனியந்தன படைப்போ ரியம்பவேநாளுங்
கவனமதை நீக்கியருள் காப்பு.

கடவுள்வாழ்த்து

கண்ணிகள்,

அல்கம்து லில்லாஹி அனைத்தும் படைத்தவனே
குல்லு நிறைந்த குதாயேகற் கோமானே ௧

பல்லுயிர்கட் கெல்லாம் பகுத்திரண மீபவனே
சொல்லி லடங்காத துய்யவனே பேசுமிந்தப் ௨

பொல்லா அடியான் பிழைபொறுத் துவெந்நாளும்
சொல்லாலரிய சுவர்க்கபதி தந்தருள்வாய் ௩

இன்சொல் லறியாத இபுனியந்தன் படைப்போரைச்
செஞ்சொல் லாற்பாடச் சிறியேன் பிழைபொறுப்பாய் ௪

காதவழி கஸ்தூரி கமழுந் திருப்புயத்தார்
ஆதம் வழியிலவர்க் கைம்பத்தோ ராந்தலையிற் ௫

சதுவேத நாயகமாய்த் தரியலர்கள் சிங்கமதாய்
எதுவாம் புறுக்கானுக் கேற்றவிறை யோன்தூதாய் ௬

ஜெகதலத்தில் வந்துதித்த செயிதுமுகம் மதுநபியின்
தருமான பூம்பாதந் தன்னைத் துதிப்பேனே ௭

அங்கங்குளிர அபூபக்கர் தாள்பணிவேன்
பொங்கமென வந்தவுமர் பொற்பாதம் போற்றிசெய்வேன் ௮

உத்ததுணையாகு முதுமானை யான்மறவேன்
கத்தனருள் பெற்றஅலி காலைச்சிர சிற்கொள்வேன் ௯

அலிபார் மதலை யசனுசைனை யெந்நாளும்
மெலிவேது மில்லாமல் வெற்றியுட னேபுகழ்வேன் ௰

பத்துப்பேர்தம்மைப் பண்பாக நான்புகழ்வேன்
முத்துநேர் நல்லோரை மோசமற நான்பணிவேன் ௧௧

அசுகாபிமார்க ளனைவரையும் போற்றிசெய்வேன்
ஓசுவான நபிமாரை யுள்ளகத்தில் யான்புகழ்வேன் ௧௨

இமாம்களவர் நால்வரையு மின்பமுட னேபுகழ்வேன்
அமானமெனுஞ் சொர்க்கநக ரவனியினிற் பெற்றவர்கள் ௧௩

மலிவார் புகழ்நிறைந்த மக்கநபி தம்பேரர்
ஒலியாமுகியித்தீனை யொருபோதும் யான்மறவேன் ௧௪

ஆதாவினுகைவள ரன்பான நாயனருள்
காதிறொலி சாகிபையென் கண்குளிர வேபுகழ்வேன் ௧௫

துங்கமுறுஞ்சதக்கத் துல்லாவைப் போற்றிசெய்வேன்
மங்கைப்பதியாலியை மணமாகப் போற்றிசெய்வேன் ௧௬

நன்மைப்புக ழார்மாமு நயினார்லெப்பை யின்பாதம்
பொன்னதெனப்போற்றிப் புகழ்வேனு னெந்நாளும் ௧௭

ஆகும்புறுக்கான்வேத மதனின் பயனறிந்த
நாகுலெப்பை யாலிமை நுவல்வேனே னெந்நாளும் ௧௮

அந்தமுள தென்புரவைக் கன்பாக வந்துதித்த
கந்தப்பிள்ளைபாதங் கருணையுட னேபுகழ்வேன் ௧௯

மூமினு னோரையெல்லா முறைவாக வேபணிவேன்
ஆமினார் பெற்றெடுத்த ஆலநபி நம்பிறசூல் ௨௰

பெற்றெடுத்த பாத்திமத்துப் பெண்ணரி னற்புருடர்
கத்தனரு ளோங்குமலி காரணமாய் வென்றபடை ௨௧

இம்மா னிலமதனி லெல்லவருங் கேட்பதற்குப்
பெம்மானினல்ல பெரியவருளாலே ௨௨

அம்மானை யாய்ப்பாட ஆனவுரை தான்கொடுத்தா
ரிம்மைமறுமைக் கிலங்கும்புகழாளர் ௨௩

ஒப்பத்துரைகொடுத்த வண்ணாயினர் காலியுசைசன்
நசிகத்துச்செய்யுரையை நவிலுமம் மானையதாய் ௨௪

அஞ்சுபடைப்போராக வருமையுடன் பாடுதற்கு
வஞ்சகமில்லாத வரிசைபெறும் ஆரைநகர் ௨௫

ஆதியருள்பெற்ற அகுமதென்போர் நற்சுதன்மச
நீதிபெறும்சா வுத்தப்பிள்ளைசிந்தி தானிந்தான் ௨௬

அம்மானைசேர்க்க அரியகொடை தந்ததனால்
பெம்மானவற்குப் பெரும்பதவி செய்திடுவான ௨௭

அருங்காலஞ் செய்கால மற்றுந்தகிர்காலம்
இருவாக வேயறியுஞ் செஞ்சொற்புலவோரே ௨௮

ஏது மறியா வெளியேன்சொல் அம்மானை
மீதிற்குற் றம்பிருக்கில் வெற்றியுடனேபொறுப்பீர் ௨௯

மல்லிகைப்பூ முன்னாலே வழுத்துஞ்சுரைப்பூப்போலும்
வல்லியர்கள் முன்னாலே வளர்த்தபெண்ணினைப்போலும் ௩௰

கப்பலதின் முன்னாலே கைத்தோணியைப் போலும்
செப்பும்புலவோர்கள்முன்னே செவிடுமையைப்போலும் ௩௧

நெற்கதிரின்முன்னாலே நீக்குசாவியைப்போலும்
பொற்பணிமுன்னாலே பூண்பித்தளைபோலும் ௩௨

காகத்தின்முன்னாலே காக்குழுப்பூச் சைப்போலும்
மேகத்தின்முன்னாலே விளம்பும் பனிப்போலும் ௩௩

பாகமறியாப் பையல்சொல் லம்மானையிதை
ஆகமறிந்தவர் ஏன்பாகக் கொள்வாரே ௩௪

செஞ்சொல்லாற்பாடித் திறமாங்க மேற்றிடுநாள்
இன்சொல்கவி சிறத் தேற்ற வருடமது ௩௫

ஆயிரத்திருநூற் றைம்பதாம் நல்வருடம்
பாயிரத்தினம்மானை பாடியரங் கேற்றினனே ௩௬

சங்கைபெறவுந்த சவுபியா நல்வருடம்
பொங்குஞ்சீர் பைங்குனி போந்ததெய்தி பத்தினிலே ௩௭

திருவளருந் தென்புரவை சேர்ந்தமுகு வீங்களிலே
மருவளருந் திண்புயத்தான் மாரன்கந்தப் பிள்ளைசுதன் ௩௮

ஆதியருள்பெற்ற அலியா ரொறுஞ்சிறுவன்
நீதிபெறப்பாடி நிறைபவரங் கேற்றினனே ௩௯

மஞ்சுதவழ் ரத்தான் மன்னன்கந்தப் பிள்ளைசுதன்
அஞ்சுபடைப்போரா யலியாங்க மேற்றினனே ௪௰

நூல்.

மன்னர்மிகப்போற்று முகம்மதுற்ற குல்நபினர்
பொன்னகரமென்னும் புகழார்மதீனமதில் ௧

கலிமாப்பயிரோற்றி கக்கனபிவீற்றிருந்தார்
அலிமாம னரிருந்தங் கரசாளும் நாளையிலே ௨

அரசர்க்கரசர் அருமைநறகுல் நபிநார்
சூரர்பதிக்ள் வந்திறைஞ்சுந் தாய்மையுள்ள பள்ளியிலே ௩

தொழுதுநால் யார்களுடன் சூழ்ந்திருக்கும் வேளையிலே
பழுதிலாவாதியருட் பாரச்சிபுரீலிறங்கி ௪

அல்லாசலாமுனாத்தா னருமதே கேளுமெனச்
சொல்லத்துடங்கினர் துட்டனிபுனியந்தன் ௨௫

கூடும்பதிகளிலே குருசானி என்னுநகர்
நாடுமதிலிறையாய் நாடாளிபுனியந்தன் ௨௬

அஞ்ஞாறுமாமுழத்தா னருமவன் மார்பகலம்
அஞ்சாறிருக்கு மானவிரு நூறுமுழம் ௨௭

நொய்யானவாயகலம் நூற்றிமுப்ப தாகுமுழம்
கையாலளந்தாற் கணக்குச்சரியாகும் ௨௮

ஒவ்வொருபல் நூறுமுழம் ஓர்முழந்தா னதினகலம்
தவ்வுடனேமூச்செதியுந் தமர்நாசிநூறுமுழம் ௨௯

கண்களொருகூட்டகலம் கைகள்பனைமரம்போல்
எண்ணில்லாரோம மிருளால்மறைத்ததுபோல் ௩௰

எட்டியுயர்ந்தமலை இரண்டுபோலேயிருக்கும்
கெட்டியாரந்தரித்துவிருக் கின்றவிருபுயத்தான் ௩௧

ஓர்பந்தியானையதங் குளபத்துலட்சமுண்டும்
ஆர்வெம்பரியதுவு மைஞ்ஞூறுகோடியுண்டும் ௩௨

காலாட்டளங்கள் கழுமில்நூறுகோடியுண்டும்
சாலவவன்றளங்கள் தான்சொல்லக்கூடாதே ௩௩

ஆண்டிருந்தானீனை யறியாதமுடனவன்
கூண்டிருக்தேபாவிக் கொடியோனிடந்தனிலே ௩௪

ஆங்கவன்பாற் றூதனுப்பி யழகாருந் தீனிலே
பாங்காய்வரவழைக்கப் பகர்ந்தானிறையவனே ௩௫

மாறுபகர்காபிர் மனவலுமை யுள்ளதெல்லாம்
யாறுமுங்களுக்கெனவே பகர்ந்துஜிபுரீலகன்றார் ௩௬

அகன்றவுடனல்ல அன்பார்நபியிறசூல்
உகந்தான்முடிந்தாலு மொருவன்மொழிதப்பாதென் ௩௭

றறமுள்ளகாலீதை யன்பாகத் தானழைத்துத்
திறமுடனேநீரோகிச் சென்றுகுரு சானியில்வாழ் ௩௮

கோமானிபுனியன்பாற் கூறுவீரோர்வசனம்
ஈமானிலேயழையு மியம்புமவனவாராவிட்டால் ௩௯

கேடுனக்கென்றேகூறிக் கேளுந்திறையதுதான்
நீடுமிதற்கவன்றான் நிச்சயித்துக்கொள்ளாவிடில் ௪௰

ஆடும்போர்செய்வோமென்றே யறிவித்துவாருமென்றார்
நாடும்புகழ்நபிதா நவின்றமொழியைக்கேட்டு ௪௧

அரசேபோய்வாமெனவ அன்பாய்க்கா லீதுவாழ்த்து
விடைவிலெழுந்து வெற்றிமிகவாரும் ௪௨

வேதாம்பர்பாதமதில் மிகமகிழ்விற் றுன்பணிந்தார்
ஆதாரகாயனரு ளாரும்காமீ தேகீர்தாம் ௬௩

ஆங்கவன்பாற்போய்த்தா னஞ்சாதுளமதிலே
யோங்குமிவ்வைசொலுமென் றானாத்தார்முகம்மதனூர் ௬௪

அஞ்சேனிறைபருளா லறையுமந்தம் மாதரவாற்
கெஞ்சஅடித்திடுவேன் கிருபைமீரென்றோதி ௬௫

வாம்பரிமிலேறி வழிகூடியோடந்தார்
போம்பரிசி ஞர்தாம் புகலுமனங்களையும் ௬௬

மலையுங்கெடியும் வழுத்தும்பலசோலைகளுந்
தொலையுங்கடந்தகன்று சொல்லுஞ்சிலநாட்கழித்து ௬௭

சென்றூர்குறசானி சேர்கோட்டை வாயலிலே
நன்றாகநாள்தோறும் நாடிநிற்குங் காவலவர் ௬௮

எங்கிருந்திங் கெங்குவந்தா யெவ்வூருனக்குமிங்கு
தொங்கிசமாய் வருஞ்சிறியாய் சொல்லென்றுதான்கேட்டார் ௬௯

அங்குநின்று கேட்டவரோ டஞ்சாதுகாலீது
சிங்காரமாகச் சில்வசனஞ் செப்பலுற்றார் ௭௰

மக்கநகர்த்தூதன் மன்னர்நபியும் மத்தியான்
மிக்கவுங்கள்ராஜனுக்கு மேலானசெய்திசில ௭௧

சொல்லவந்தேன் போறமெனச் சொன்னார் நபிதூதர்
நல்லதுநீர்நில்லுமென நவின்றந்தக் காவலவர் ௭௨

அங்கோரமேயோடி யானமக ராஜனுக்குப்
பன்னோரஞ்செய்யுமுறை பாதந்தனிற்பணிந்து ௭௩

பன்னினர்மன்கேட்டுப் பகர்மக்கத் தூதனெத்தா
னென்னென்றறிவோ மிங்குவரச் சொல்லுமென்றான் ௭௪

அப்போதுகாவலர்க ளங்குசென்று காசிதை
மெய்ப்பாரரசன்விடை வேண்டினேம் போமென்றார் ௭௫

வாசல்தனை விட்டவர்தான் வந்தார்தெருவீதி
தேசநெடு வீதியெல்லாந் தேர்நிற்கும்பந்திகளும் ௭௬

பாரக்குஞ்சரங்கள் பரவிநிற்கும் பந்திகளும்
கோரமொடுபாயுங் குதிரைநிற்கும் பந்திகளும் ௭௭

ஒட்டகங்கள்கூடி யுலாவிநிற்கும்பந்திகளும்
மட்டுமட்டாய்ச் சின்னை வனைந்திருக்கும் பந்திகளும் ௭௮

ஜங்கிகள்கூட்டத் தளங்கள்நிற்கும் பந்திகளும்
பொங்குநாமஜாமி பொலிந்திருக்கும்பந்திகளு ௭௯

கட்டளகார்காவலர்கள் காத்திருக்கும் பந்திகளும்
எட்டுத்திசையு மிடமில்லா தேநிறையும் ௮௰

கங்குலினைவே அபசியர்கள் கூட்டங்களும்
பங்கமில்லாச்சாவடியும் பாராசர் கூட்டங்களும் ௮௧

கண்ணுக்கடங்காத காடிவருந் தோற்றங்களும்
எண்ணுக்கடங்காத வேறுகோமாரிகளும் ௮௨

பல்லக்குடனேறும் பாங்கார் வரிசைகளும்
சொல்லத்தொலையாத சூரமார் வீரர்களும் ௮௩

மலைபோலுயர்ந்துவரு மாளிட வர்கூட்டங்களும்
நிலைபோகக்கூடாது நின்றமனுக் கூட்டங்களும் ௮௪

அங்காடிவீதிகளு மானநெடு வீதிகளும்
சிங்காடி வைத்திருக்குஞ் சிறப்புள்ளகூட்டங்களும் ௮௫

நாடினவர்பந்தடிக்கு நல்லதெரு வீதிகளும்
கூடிநீராடுகின்ற கோதையர்கள் சந்தடியும் ௮௬

மல்லர்கள்கூடி மகிழ்ந்திருக்குஞ் சந்தடியும்
சொல்லரிய ராஜாக்கள் சூழ்ந்திருக்குஞ் சந்தடியும் ௮௭

ஆனையுடன்போ ரடருகின்ற சந்தடியும்
மானனையார்கூடி மகிழ்ந்திருக்குஞ் சந்தடியும் ௮௮

சித்தர்கள்கூடிச் சிலம்படிக்குஞ் சந்தடியும்
சத்ரங்களி லன்னஞ் சமைக்குகின்ற சந்தடியும் ௮௯

கடைவீதில் ரத்தினங்கள் காட்டுகின்ற சந்தடியும்
கொடைகொடுக்கும் வீதிகளிற் குரவைமிகு சந்தடியும் ௯௰

பாலிசங்கள் நன்றாய்ப் படிக்குகின்ற சந்தடியும்
ஆயிரவிதங்க ளொன்றுக் கறையமுடி யாததெல்லாம் ௯௧

கண்டுமனம்பதறிக் கத்தனே காவலனே
யென்றருள் வென்னிறையே என்னைக்காரொன்றுரைத்து ௯௨

காபிர்களை வெல்லவெனக் காலிதிபு னுமொலிது
நாவுதவில் சலவாத்தை நவின்றிறையைத் தான்புகழ்ந்து ௯௩

எறுபரி போடுசென்றங்கேந்த லாண்மனையில்
வேறுமொழி கூறாமல் விரசாய்ப் பரியிழிந்து ௯௪

நின்றுகொஞ்சநேர நீதிநபி யாதர்பின்னே
நன்றிலாதந்த ராஜனைத்தான் காண்பமென ௯௫

சென்றாரவன்கோலுவிற சேர்ந்துவரும் பேருடனே
வண்டார்குழலியர்கள் வாழ்த்திநடனம்புரியும ௯௬

உப்பரிகை மேடைகளு முயர்பளிங்கி மண்டபமும்
சப்பரமஞ்சக் கால்கள் தாவகுமவரத்தினத்தால் ௯௭

தங்கத் தகட்டாற் றனமூத்து மாடங்களும்
சங்கதிதியைத் தான்வளைந்த பாவனையாய் ௯௮

அமைச்சாருமிருந்தங் காசனைக்கொண்டாடுவதும்
சமைத்தமணிப் பெண்ணார்வெண் சாமரங்கள்வீசுவதும் ௯௯

காளாஞ்சி யேந்திநிற்குங் காரிகையார் கூட்டங்களும்
பாமரங்கொலுவிற் பாதிதையர்கள் சந்தடியும் ௱

நாடகர்தான் ஆடுநரும் நட்டுவங்கள் பாடுநரும்
ஆடகமார் மேடையிலே அஞ்சுகங்கள் பேசுவதும் ௱௧

தார்வேந்தர் தாள்பணிந்து தானடப்பங் கட்டுவதும்
தேர்வேந்தர்வந்து ஜெயஜெயா வென்பதுவும் ௱௨

கட்டியங்கள் கூறிக்கவரிக்கா லிட்டுவதும்
மட்டில்லா ராஜாக்கள் மன்னனைக்கொண் டாடுவதும் ௱௩

இக்கவித மனேக விசம்பிரம தாயிருக்கும்
அந்தச் சபைதனிலே ஆதிநபி தூதர்சென்று ௱௪

என்றுமுள்ளோனை யிறைஞ்சே புள்ளினந்தே
பொன்றுமுறைபாம லூமனைப்போல் நின்றனரே ௱௫

செப்புமந்த மன்பார்த்துச் செங்கண்ணிற் றீத்தெறிப்ப
இப்போதுநீயிங் கெங்குவந்தா யென்னிடத்தில் ௱௬

தப்பாமல் வந்தசெய்தி சாற்றென்றான் சீக்கிரத்தில்
தப்பாருமந்தத் தறுகண்ணன் தானுரைத்த ௱௭

அந்தமொழிகேட்டே யருள்வார் நபிதூதர்
தந்தைதா யில்லான் தன்னருள் வளர்ந்தோங்கும் ௱௮

அருசிறப்பு சோபேறு மாலநபி தூதனியான்
ஒருசொற் பகருகிறே னுண்மையுடன் கேளுமென்று ௱௯

சற்றேனுமஞ்சாது தருமாதி தனைத்துதித்து
முத்தானவள்ளல் முகம்மதுவைத் தானினைந்து ௱௰

சொன்னாரிங் குள்ளோருஞ் சொருசாரு நீர்தானும்
பின்னேதுஞ் சொல்லாமற் பேசுமென் நபிதீனில் ௧௧௧

வருகவுரைத்தார்கள் மறுத்தொன்றுமபேசாமற்
பெருமையுடன்வந்தீரேற் பேறுமக்கு மெத்தவுண்டாம் ௧௧௨

என்றுரிதுகேட்டே யிபினியர்தன் கோபங்கொண்டு
துன்றுருங்கோபவனல் சொரியவிரு கண்ணதிலும் ௧௧௩

கையைநிலத்தடித்துக் கறுகறெனப் பற்கடித்துப்
பையலேநீதான் பயப்படா தென்னைநோக்கி ௧௧௪

தீனில்வரச்சொன்னயே நீயோ இங்குன்னுயிரை
வானில்விடுமுன்னே வகைவிபமாயுரைப்பாய் ௧௧௫

என்றான்பொல்லாத விபுனியந்த லப்போது
நன்றாம்நபியின் நற்றூதர் தாமுரைப்பார் ௧௧௬

மக்ககர்சொர்க்ககர் மற்றுநகர்க் காரராய்
மிக்கவராய் வந்துதித்திம் மேதினியிற் காமீர்கள் ௧௧௭

திருக்கிசையாரைச் செங்குருதி யாறொழுக
வானுக்குயி ரேற்றும் வள்ளல்நபி யாமவர்தாம் ௧௧௮

ஆகம்வழி யாயவரி னைம்பத்தோ ராந்தலையில்
போதமுடனவர்தார் புறக்கானவர்க்குளது ௧௧௯

பாதமிதி தோற்றம் பாருலகி லில்லார்காண்
ஓதுகின்றமானதற்கே யுவந்துமினை நின்றவர்காண் ௧௨௰

அட்டதிசைபோற்று மப்துல்முறுபின்றவத்திற்
றுட்டர்களைத் தாளெடுக்கத் தோன்றுசுத ஞானசிங்கம் ௧௨௧

கல்விமிகுந்துவளர் காசிமெனுந்திறவார்
சொல்லும் புகழூறத் தொல்லுலகிற் றங்கமகன் ௧௨௨

மூங்கும்புக ழப்துல் மூத்தலிபா மன்னர்சேய்
சிங்கத்திறசிங்கம் திறலப்துல் லாதவத்தில் ௧௨௩

வந்துதித்த வெங்கள் முகம்மதுற்ற சூல்நபிதாம்
இந்துநிகரொவ்வா விறசூல் நபியொளிவில் ௧௨௪

பாதியைக்கொண்டே படைத்தா னறுதனை
நீதிபெறுமாலநபி நீண்டவொளிவதிலே ௧௨௫

நாலிலொருபங்குகொண்டு நற்குறுசைத் தான்படைத்தான்
வாலிபரெங்கள் முகம்மதுற்ற சூலொளிவில் ௧௨௬

அஞ்சிலொரு பங்குகொண்டே யானசொர்க்கந்தான்படைத்தான்
மஞ்சின்குடையுடையார் முகம்மதுற்றசூலொளிவில் ௧௨௭

ஆறிலொருபங்கா லரியலெள்கு வைப்படைத்தான்
கூறுகால்வேதக் குருவா முகம்மதுவினை ௧௨௮

ஏழிலொருபங்கா லெழுதுங்கலத் தைப்படைத்தான்
வாழியாரமெங்கள் முகம்மதுற்ற சூலொளிவில் ௧௨௯

எட்டிலொருபங்கா லெழும்பொழுதைத் தான்படைத்தான்
தட்டில்லாவெங்கள் சங்கைநபி தம்மொளிவில் ௧௩௰

ஒன்பதிலொருபங்கா லுறுமதியைத் தான்படைத்தான்
அன்பரொறுமெங்க ளகுமதுற்ற சூலொளிவில் ௧௩௧

பத்திலொருபங்கால் படைத்தான் பலவுயிரும்
பத்திபெறுமெங்கள் பயகாம்பர் தம்முடைய ௧௩௨

வெற்றிகளைச் சொல்வதற்கு மேதினியி லாருமுண்டோ
நற்றவமாரெங்களுக்கு நன்றாய் மனமகிழ்வாய் ௧௩௩

இறுகியில்மன்றடுகின்ற வெழிலார் முகம்மதுநான்
அறுதியா யறுங்கரத்தை யன்றுபொருத்தி வைத்தோர் ௧௩௪

அரவோடுபேசினவ ரரவைவதை செய்தவர்காண்
இரவொன் றிலேழ்வான மேகியிங்கு மீண்டவர்காண் கஙரு

புலியோடு பேசினவர் புகல்கரத்தால் நீரழைத்தோர்
அலிமாம ஞரவரை யறியாத பேருளரோ கஙசா

காட்டுவழிகஸ்தூரி கமழுந்திருமேனியினர்
ஏதமணுகாத பிறநூல் முகம்மதுகாண் கஙஎ

வலதுகரம்நீண்டிருக்கும் வள்ளலா மெங்கள்நபி
பலதுமவிந்துரைக்கும் பார்த்திபர்கா ணெங்கள்நபி கஙஅ

பிடரிதனிலாஞ்சினை தான் பெற்றவர்கா ணெங்கள்நபி
அடருங்குபிரோரை யாக்கினைசெய் வார்காணும் கஙகூ

கதிஜாமணைளெனக் காசினியெல் லாமறியும்
மதியையழைப்பித்தவர்காண் மண்மீதி லெங்கள்நபி கச௰

மெத்தப்பொறுதியுள்ள மேன்மையபூ பக்கருக்கே
யுத்தமருகனென வூர்றிய மாட்டாதோ கசக

வென்றியுமறினுக்கு வேண்டுமருகனென
நன்றியுளயாரும் நலமாயறிவாரோ கசஉ

நீதியுதுமானார்க்கு நேசமுறு மாதுலனென்
றோதும்புவியி லுள்ளவரெல் லாமறிவார் கசங

மேகக்குடையுடைய வேதாம்ப ரெங்கள்நபி
ஆகமறுதன்னை யறியாத பேருளரோ கசச

அசனுசைனார்க்கு மன்புடைய பேரனென
நிசமாயறிவார்கள் நீணிலத்தி லுள்ளவர்கள் கசரு

பாத்திமா நாச்சியர்க்குப் பண்பானதந்தையென
ஆத்துமங்களெல்லா மறியாதோ இப்புவியில் கசசா

நேசமுறு மாநகர் நீண்டபதிதனிலே
வாசமுற வந்துதித்த வள்ள லகுமதென்போர் கசஎ

கத்தனருளாற்பெற்ற கனயோகராவுத்தன்மேல்
நித்தமனம்வைத்தருளும் நீதியுள வெங்கள்நபி கசஅ

சாயாநிழலுடைய சங்கையுளா ரெங்கள்நபி
வாயாரச்சொல்லவொண்ணு வன்மையா ரெங்கள்நபி கசகூ

ஈயெறும்பு மேனியிலே யொப்போதுந் தீண்டார்காண்
காயம்பளபளெனக் காணுங்காண் நந்நபிக்கு கரு௰

சம்பத்துமிக்க தருமமு முள்ளவர்காண்
ஜென்மமெடுத்தோரிந்தச் செய்திதா னறியார் கருக

ஆதம்படைக்க ஆண்டாண்டா மாயமுன்
நீதமுடனிந்த யுகம் நிச்சயமாய்ச் செல்லமட்டு கருஉ

நித்தமலக்கு நிறைந்தெழுப தாயிரம்பேர்
சுத்தமுடன்சோடதனை செய் தோன்றவரும் வெள்ளானை ௧௫௩

வெள்ளானை மேற்பவனி வேடிக்கை யாய்வருவார்
கள்ளாநீ கேட்டிலேயோ கிருகரதில் வீழாதே ௧௫௪

எதுக்குடல்வளர்த்தா யிறசூல் நீயறியாமல்
ஊனுக்குடல்வளர்த்தாய் உன்கேட்டை யாரறிவார் ௧௫௫

நீதமறிந்திலேயோ நீமூடனாகினையோ
போதமதுபோச்சோ புத்திகெட்டுப்போனாயே ௧௫௬

சாதிகெட்டவேந்தேநீ தார்நபிபேர் கேட்டிலேயோ
நீதியோமூடா நெட்டையா யேன்வளர்ந்தாய் ௧௫௭

பஞ்சாநீயெங்கள் பயகாம்ப ரையறியாய்
பிஞ்சவளர்ந்துபி லேச்சனைப்போ லாகினையே ௧௫௮

பாழில்வளர்ந் தென்னபலன் பயகாம்பரையறியாய்
ஊழியில்நீதா னெயிலுக் கிரையாவாய் ௧௫௯

முட்டிக்குனியாதே முகம்மதுற்ற சூல்பதத்தை
வெட்டிப்பிடித்தார்க்கு ஈடேறல் முண்டாமே ௧௬௰

இன்பமறிந்திலேயே யேன்கெட்டாய் நீயாசே
அம்பரமட் டேன்வளர்ந்தா யாலநபி யையறியாய் ௧௬௧

மொத்தியாய் நீவளர்ந்தாய் மூடாபேர் நன்னபியை
நத்திஇருந்திலேயே நாளெல்லாம் போக்கினையே ௧௬௨

கத்திக்கிரையாவாய் காசீமைக் கண்டிலையே
பெற்றியறிந்திலேயே பேயாபோ நீயாசே ௧௬௩

வெறிபிடித்த மன்னவனே வேதாம்பரையறியாய்
குறிகேட னுய்வளர்ந்தாய்கெசடியபவஞ் செய்தாயே ௧௬௪

மெத்தவளர்ந் தென்னபலன் மேன்மைநபி தம்பதத்தை
நித்தமறியாது நீசாநீ யேயிருந்தாய் ௧௬௫

இரவுபகலாக வெங்கள்நபி தம்பதத்தில்
வரவுமறிந்திலேயே வான்மட்டு மேன்வளர்ந்தாய் ௧௬௬

கலியோ நபிதமைத்தான் கண்டிலேயே நீபாவி
அலிமாமாவென்று மறிந்திலேயேநீபாவி ௧௬௭

ஏதடாநன்னபியை யின்னா ளறிந்திலேயோ
சூதடாகற்றாய் தோசித்தனம் விட்டிலேயே ௧௬௮

அடாரூந்துன்மார்க்கா யறிந்திலேயே நன்னபியைத்
தொருவிதிவசமோ சூமனாய்ப் போனாயே ௧௬௯

பதியெல்லாந் தானறியும் பாத்திபராம் நன்னபியை
விதியோவுன் கேடோ விழலாயறிந்திலேயே ௧௭௰

மக்கத்தபூஜகலே மாட்டினதுங் கேட்டிலேயோ
உக்கித்தான்போறவனே யுன்சமூக மெவ்வளவு ௧௭௧

மெத்தவனார்த்தனையே மேன்மைபகமி தப்பெருமம
சற்றும் நிந்திலேயிச் சடமெடுத்திவ கெல்லையலன் ௧௭௨

நாகந்தலையரிந்த நாயகராமெங்கள்நபி
யாகந்தனையடா வன்பாகக் கேட்டிலேயோ ௧௭௩

அழற்குழியிற்போகாம லாலநபி யைப்பணிநீ
ழுழக்கமுள்ள ஆலிவந்தால் மோசங்கள்வந்திடுமே ௧௭௪

ஜெனமமட்டு நீநரகைச் சேராதே மன்னவனே
மூன்னமதைக் கைவிட்டு மூடனுப்போகாதே ௧௭௫

கள்ளாய்நீ யிங்கிருக்கிற் கத்தன்புலி வந்தாக்கால்
எள்ளாய்ப்பறந்தாலு மெங்களலி விட்டுவிடார் ௧௭௬

சாற்றும்புறுக்கானைத் தள்ளிவிட்டுப் போகாதே
ஆத்துமத்தின் மெய்யை யழற்குழியிற் போடாதே ௧௭௭

உன்சேனைகள்தா னுதவுமென்று மெண்ணாதே
தென்பாய்ப் பற்ப்பாச் சினத்தினலி வந்தக்கால் ௧௭௮

உன்சேனையெல்லா மொருவீச் சவாட்குத்
தனசேனை யோமிருந்து தான்வாழ வேணுமென்றால் ௧௭௯

மோசம்வருமுன்னாலே மோட்சமதை வேண்டுமென்றால்
பாகிக்காய்ப்போகாமல் பயகாம்பரீனதிலே ௧௮௦

ஆசைதனைவைத்திடுநீ யாளலாஞ் சொர்க்கநகர்
நேசமிதுபோல நீஞலகி லெங்குமில்லை ௧௮௧

புறுக்கான்வழிசென்றால் பொற்பதியிற் சேர்க்குமதிற்
சறுக்காமல் வந்திடுநீ தானாகிற்சேராமல் ௧௮௨

சேராதே யென்றார் திகைத்திபுனியந்தானும்
ஏராதசொல்லுரைத்தா யிந்தவிடத்தில்நின்று ௧௮௩

நல்லதடா நீசொன்னமொழி நன்றுச்செனச்சினந்து
பல்லைக்கடித்துப் பதாதிகளைத்தானோக்கி ௧௮௪

தூதன்தனைக் கொன்றாற் சூழ்பழிகள் மெத்தவுண்டாம்
காதவழிக்கப்பாற் கழுத்தைநெமிசித் தள்ளுமென்றான் ௧௮௫

தள்ளுமென்ற சொற்க்கேட்டுச் சாத்துவார்காலிது
கொள்ளாய்யயித்தியயோ கொண்டாயநீ தானாசே ௧௮௬

ஏதடா தள்ளுகிறாய் என்வார்த்தையைக் கேளு
பாதந்தனை பாவாத பார்த்திபர்தம்மும்மத்தியான் ௧௮௭

போதமில்லா வுன்படைதான் பொங்கியிருந்தாலும்
நீதமுறுமெங்கள் நிபுணாலி வாள்தனக்கு ௧௮௮

காணுமோ வுன்சேனை காணாது பார்க்கவந்தேன்
நாணுமோ துல்பக்கறு நாணுதிங் குன்சிரசை ௧௮௯

துக்குற்றேன் சொன்னதெல்லாஞ் சொன்னார் நபிகேட்டு
மிக்கபதி தீனவர்க்கு விளம்பினார் பொல்லாத ௧௯௦

இபினியந்த னோடு மினித்தா மதங்களினாலிப்
புவனியுள்ள காபிரெல்லாம் பூசல்படக் கும்படிக்கு ௧௯௧

படைபோக வேண்டுமினிப் பறையடிக்கச்சொல்லுமென்றார்
கொடையின ரிறசூல்பாற் கொள்கை யிதுநடக்க ௧௯௨

மடைய னிபுனியந்தன் மதார்த்தங்கு கோபங்கொண்டு
புடைசூழ்ந் திருந்தவர்க்குப் புகன்றனே இவ்வசனம் ௧௯௩

நகையார் நபியேது நவில்புறுக்கான் தானேது
மிகையார் நபிக்கு வேண்டுகா ரணமேது ௧௯௪

மக்கநகரேது மாட்சியலி தானேது
இக்கணமே நம்படையை இங்குவரச் சொல்லுமென்றான் ௧௯௫

படைமுரச வர்முழக்கப் பார்வேந்த ரெல்லோரும்
சடுதியிலேவந்து தார்வேந்தனைப்பணிந்தார் ௧௯௬

அன்பதுகோடி யரியமத யானைகளும்
ஒன்பதுபேர் கூர்மை யுள்ளபெரும் ராஜர்களும் ௧௯௭

அஞ்சப்பொருவ மென ஆட்கள்கையி லேதடியும்
குஞ்சரங்கள்கையிற் கொடுத்தா ரிருபுலக்கை ௧௯௮

பரிநூறுகோடி பலதிக்கி லும்நெருங்கி
இருபதுகோடி இரதம் நெருங்கிவர ௧௯௯

அறுபதிலட்சம் அபசிக ளின்சேனை
உறுமிதன் சேனை யொன்பது கோடியுண்டும் ௨௱

பூதமெழுகோடி போந்தபடை வீரரெல்லாம்
ரூதரெழுகோடி துட்டப் படையுடனே ௨௱௧

ஜின்கள்வெகு கோடி திரண்ட படையுடனே
சங்கிப்படையதுதான் சாத்துமெழு கோடியுண்டும் ௨௱௨

காலாட் படைகளைத்தான கணக்கிடவுங் கூடாது
சாலாட் டிபுனியந்தன் தான்போர்க்குப் போகவென்ன ௨௱௩

ஊத்தைக் குணமுடையோ னானுங் கிருந்தனனே
நேத்தியர் யப்போ நிதம்பணிகள் செய்யுமவர் ௨௱௪

அரிசிகலநூறு மன்பாய்ச் சமையற்பண்ணிப்
பெரியவொட்டை மூந்நூறும் பிந்தாம லேயாக்கி ௨௱௫

கோழியேசுட்டை கோழி யிருநூறும்
தாழியிருநூறுங் கட்டாய்ச் சமையற்பண்ணி ௨௱௬

காய்கனிகள்சொல்லிக் கணக்கிடவுக் கூடாது
மாயனிபுனியன்முன் மலைபோல வேகுவித்தார் ௨௱௭

நெய்களொரு நூறுகுட தோரக வேவார்த்துத்
தொய்யுந் தயிர்க்குடங்கள் சோராது மூநூறு ௨௱௮

பால்களொரு நூறுகுடம் பூண்டாக வேவார்த்து
மால்கொள்தே னூறுகுடம் ... ப்பாக வேவார்த்து ௨௱௯

அத்தனையுந் தானருந்தி ... ஞ்சால்த் தண்ணிருஞ்
சுத்தமுட னேயருந்திச் சேர்ந்தா னிபுனியந்தன் ௨௱௰

கட்குடங்க ளாயிரந்தான் கண்டமட்டு மேயருந்தி
பூட்டிபலத்தை யெண்ணியவ னேகோ வெனவெழும்பி ௨௱௧௧

பன்னீரும்நல்ல பலஞ்சணமுந் தான்பூசி
வன்னிக்குணவெனவே வாய்த்த பணியணிந்து ௨௱௧௨

அரைமிற்கரும் பொன்னனாரு ணைஞ்ஞூறு பாரமுண்டும்
வரைபோல் புயத்துடையான் வாத்தஇடைக் கச்சதுதான் ௨௱௧௩

ஒருநூறு பாரமுண்டு முல்லாசக் கச்சையிடை
அருகா யெடுத்தணிந்தா னனக்குருங் கச்சையொன்று ௨௱௧௪

ஈராயிரம்பாரர் மிரும்பங்கி தானணிந்தான்
ஓராயிரம்பாரா வுல்லாசத் தொப்பியிட்டான் ௨௱௧௫

கா... ன்தான் கணக்கா யிரப்பாரம்
பாலிக்கும் பொன்முடிதான் பத்தாயிரங்க ளுண்டும் ௨௱௧௬

நாகமணிமாலை நாலா யிரப்பாரம்
ஆகமதிற் பூசணமு மையா யிரப்பாரம் ௨௱௧௭

வில்லாயிரம்பாரம் வேலா யிரம்பாரம்
பல்லாயிரங்கள் பலமா யெடுத்தணிந்து ௨௱௧௮

அம்பறாத் தூணி யாறு யிரம்பாரம்
உம்பருங்கண்டா லுடனே திடுக்கிடுவார் ௨௱௧௯

அண்டமெட்டுந் தண்ட மாறு யிரம்பாரம்
முண்டனெடுத் தகைவாள் மூவா யிரம்பாரம் ௨௱௨௰

ஆயிதங்க ளின்னு மனேக மெடுத்தணிந்து
தோயுமனை யாளிடத்திற் சொன்னான் பயணமென ௨௱௨௧

ஆயும் பெரியோர்க்கு மன்பர் நபியுடனே
பாயும் புலியேநீர் படைபோக வேண்டாங்காண் ௨௱௨௨

இன்றிரவு கண்டகன வென்னென்று நான்சொலுவேன்
நன்றதல்ல வென்னரசே காடாதீர் போறதற்கு ௨௱௨௩

போகாதே யென்றுத்தாய் புத்தியல்லப் பெண்ணாசெ
ஆகாத அலிதலையை யன்பாக வேதிருகி ௨௱௨௪

கம்மூடைய சாமிபதம் காளுங் கெதியெனவே
வம்முடைய பேர்விளங்க விப்போது வாராட்டால் ௨௨௫

என்னைபோல் வேந்தருக்கிங் கென்றும்பய வாரிடுவேன்
பொன்னைப்போல் நீயிங்கிரு பூவே பயம்வேண்டாம் ௨௨௬

ஒன்றுக்கு மஞ்சாதென் றோதி யிபுனியந்தன்
கன்றுக் கிரங்குமந்தக் கற்றுயைப்பேசலுற்று ௨௨௭

வத்த னிபுனியந்த னேறுதற்கு வாரணத்தை
சுத்தமுடன் கொண்டுவரச் சொன்ன னரசாகளுக்கு ௨௨௮

உயர மெழுநூறு உள்ளமத யானைதனை
வயர்விரைச் சோடனைகள் ஆபரண மும்மணிந்து ௨௨௯

காலுக்குநல்ல கனகதண்டை தானணிந்து
மேலுக்குப் பொன்சிரா மேன்மையுடனேயணிந்து ௨௩௰

குஞ்சரத்தின்கையிற் கொடுத்தா னிரும்புலக்கை
அஞ்சபொருவெனவே யானைக்குண வளித்தான் ௨௩௧

சோடனைகள்செய்துபின்னர் தும்பிதனைக்கொண்டுவந்தான்
காடியிபுனியந்தன் நாகபதி யைத்தேடி ௨௩௨

ஆலயத்தைச்சுற்றிவந்தங் கிருகின்ற புத்ததயெல்லாம்
மாலின்முத்திக் கைபெடுத்து வணங்கியே தெண்டனிட்டு ௨௩௩

வெற்றிதா வென்று விளம்பிக்கும் பிட்டுநின்றான்
மத்தியிலே தாமிதித்த மண்ணிடம் பாலெழும்பும் ௨௩௪

கலாபமாய்ச் சொன்னவகை காதில்விழுந் தாட்டாமற்
குலர்விவரும் யானையின்மேற் கொற்றவனு மேறினனே ௨௩௫

மலக்கல்மவுத்துவந்து மன்னவனைக் கொண்டேகந்
கலக்கமில்லா வேழங் கலங்கி மிகமுழங்கி ௨௩௬

வேந்தர்வெகு கோடி வெள்ளமுமன் முன்னடக்க
மாந்தர்பல கோடி மதயானை தேர்நடக்க ௨௩௭

பரிகள்வெகுகோடி பரந்துவர நாலுதிக்கும்
கரிகள்வெகுகோடி நாட்டமுடன் பின்தொடர ௨௩௮

கொழுத்தவுடற்காரர்களைக் கூடியேபடங்குவைக்க
வழுத்தமுள்ள வாலிபரை யன்னசுற்றம் பார்ப்பாரும் ௨௩௯

கவிகை யொருகோடி கட்டாகச் சூழ்ந்துவர
சிவிகை யொருகோடி திரளாகச் சூழ்ந்துவர ௨௪௰

கொடிகளொருகோடி கூடியே தானெருங்கத்
தடிகளொருகோடி தான்சுமக்குங் குஞ்சரங்கள் ௨௪௧

தண்டுமுரசுங் தாவுகாளம் நெருங்கக்
கண்டத்துடியுங் கனகதப்புந் தானெருங்க ௨௪௨

தப்பட்ட மும்முரசுந் தாறு நெருங்கிவரக்
கும்பிட்டி யானைகளுங் கோதனத்திற் கைதடவி ௨௪௩

வாத்தியங்கள் மூவாறும் வளமாய் முழங்கிவரத்
தாத்திரைட கொண்டதுமா தோன்றலும் வேழமது ௨௪௪

ஆலிபெங்கேறலியங்கேயிலா ருன்படை தானடக்கக்
கோலிப வேர்தமொல்லா அ கரித்துத் தானடக்க ௨௪௫

அப்பு வில்லுக்கார ரணியாய்க்கக்காரர்
ஒன்பதுலக்க மூயர்ந்தபடை சூழ்ந்துவர ௨௪௬

கனைாத யானைபரிக் கத்தர்தடு மாறிவர
அரபரிகளு மழகாகக் கூடிவர ௨௪௭

குன்றுமலையுங் கொடுங்கான மூங்கடந்து
கன்றுமலையுங் கடுங்கா வனங்கடந்து ௨௪௮

சிங்கமுடனளித் திரளுங் கலைத்தொதுங்க
பங்கமுடனே பறவை பயந்தோட ௨௪௯

ஆறுகுளம்வாவி யறப்பாவை நீர்சுவறப்
பாறுமிபுனியந்தன் பலநாள் வழிதொலைத்து ௨௫௰

சென்றே னறபுநகர் சேரவே தானடர்ந்து
நன்றீது மில்லாத நங்க ளிபுனியந்தன் ௨௫௧

மக்கா மதின மன்னவனுஞ் சேர்ந்தனனே
தக்க இபுனியந்தன் தானங்கு வந்ததனே ௨௫௨

ஆலஙபி அாதரிலோர் அழகார்கண் டேபதறிச்
சாலமயங்கித் தங்காம லோடினரே ௨௫௩

ஓடியே மாமதின வூர்நபிதம் பார்சேர்ந்து
நாடியிருக் கின்றபள்ளி நாயகர்முன் சொலும்போது ௨௫௪

கூடியிருந்தார்கள்-குருநபியும் யார்களுடன்
தேடரிய வன்னூர் செப்பிடிலா ராரென்னில் ௨௫௫

வம்புறும் பேசாத வள்ளல் அபூபக்கரும்
சம்புதலில் லாதுதுமான் சங்கைபெறு நல்லலியும் ௨௫௬

அசனு ருசைனுரு மன்பான ஜென்னத்தினை
வசமாகப் பெற்ற வள்ளலி லாந்தவரும் ௨௫௭

ஏகனருள்பெற்ற இபுனு மாலிக்கவரும்
ஆகமறிந்த அன்பர்சல்மான் பாரிசுவும் ௨௫௮

ஞானத்தவம்புரியும் நசிகத்துக் கல்வியரும்
ஊனமில்லா காலீ திபுனு வொலீதவரும் ௨௫௯

அல்லா வருள்வனரும்அப்துற் றகுமானும்
ஒல்லா கிருபையுள ஒலீதிபுனு மூன்தாதும் ௨௬௰

செல்வமது பெற்ற சிறப்பிபுனூமுன்தாதும்
நல்லறங்கள் பெத்திருக்கும் நல்லிபுனு தாபீத்தும் ௨௬௧

ஆர்க்குமுப காரியாம் அப்துற் றகுமானும்
வார்க்குங்கிருபையுள்ள எழிலுபுனு சையாதும் ௨௬௨

அச்சந்தவிரு மபூஉறை ருவவரும்
பச்சமிகவுள்ள பண்பார் மஆதிபுனும் ௨௬௩

நபியார் வளர்த்தபிள்ளை நல்ல உசாமாவும்
புவியோர்புகழும் பொற்பிபுனு அப்பாசும் ௨௬௪

மறையின் படிநடக்கு மாலிபுனு சன்னவும்
சறயின் படிநடக்கும் சைதிபுனு மஆக்கும் ௨௬௫

அறிவுக்கட லான அரியவன் சாரிகளும்
பொறுதிக் குணமுள்ள புகழிபுனு மனகுறம் ௨௬௬

நாட்டிகம தான சைதிபுனு தாபீத்தும்
பூட்டுபோல் வந்த புகழப்துல் தவ்வாதும் ௨௬௭

உண்மையது பெற்ற உபைதத்துல் சாவீகும்
கண்மணியைப் போலிருக்குங் கன்கஇபுனுசலாம் ௨௬௮

எங்கும்பர சிங்க மிபுனு பசீறவரும்
அங்கங் குளிரவரு மன்பான தைபிபுனும் ௨௬௯

பொங்குமழ குள்ள புகழிபுனுயாதானும்
சிங்கமெனவந்த சிறப்பா ரிபுனனசும் ௨௭௰

எதிர்த்தவரைக் கொல்லு மிபுனு அசுமாவும்
கதித்தபடை வெட்டுங் கனகரிபுனு சாமாவும் ௨௭௧

எண்ணைந்தி ராயிரம்பே ரோற்ற சகுபிகளும்
பண்ணென்று வந்த பயகாம்ப ருங்கூட ௨௭௨

ஒத்திருந்து நல்லறிவு வோதுகின்ற வேளையிலே
கத்துக்கடற்போற் கலந்திருக்கும் வேளையிலே ௨௭௩

தூதனுமங் கோடிநபி தூயதிரு முன்னில்நின்று
காதவழிவீசுங் கபீபிறகு லைப்பணிந்து ௨௭௪

கைகட்டியோரிடத்திற் கடும்பறத்தத் தோடுநின்றார்
மெய்கெட்டியான வேந்தர்பணி நந்நபிதாம் ௨௭௫

பணிந்துநின்ற தூதுவனைப் பார்த்துத்தா னேதுனைப்பார்
அணிந்தகலன் மேனியல்லா மஞ்சுவதேன் சொல்லுமென்றார் ௨௭௬

கண்டபுதுமைதனைக் காவலரே சொல்லுதற்கு
விண்டிடுமிங் கெந்தன் மேனியல்லா மஞ்சுதென்றார் ௨௭௭

அஞ்சாதே சொல்லுமென்றங் கருளினர் நந்நபிதாம்
பஞ்சமா பாதகனோர் பாரமலை போலுயரம் ௨௭௮

எழுகடற்போலே எகுபண்டுடனே
சூழும்படையுடனே தோன்றியே வாரானே ௨௭௯
இந்தப்படைத்தனக்கே இங்கொருவர் தங்கரிது
அந்தப்படையைக் கண்டா லொருவர் தரியாரே ௨௮௦
மக்கம்பிழைத்திடுமோ மாமதினாதங்கிடுமோ
சுக்கனரு ளெப்படியோ கபீபே யெனவுரைத்தார் ௨௮௧
அந்தரத்தைத் தொட்டுநிற்கு தங்குவரு வோன்சிரசு
இந்தபடைக்கங்கே யெவர்பிழைப்பா ரென்றுரைத்தார் ௨௮௨
அந்தமொழிகேட்டே யறைவார் நபிறசூல்
முந்தவிட்ட வோலையிவன் மூடனிபுனியன்காண் ௨௮௩
வந்ததுபோ லாகுதென வள்ளலிற சூலுரைத்தார்
சொந்தமொழி கேட்டவுடன் சூழ்ந்த அசுகாபிகள் ௨௮௪
சிந்தைதிடுக் கிட்டுமறு செய்தியொன்றுஞ் சொல்லாமல்
அந்தமுடனே யவர்பாட்டி லேயிருந்தார் ௨௮௫
கலங்கி யிருக்குமதைக் கண்டோர் நபியிறசூல்
மலங்கியிருக்குமந்த வலியார்கள் தம்முடனே ௨௮௬
தொழுதுதுவா வோங்கித் துய்யநபி யேதுரைப்பார்
பழுதில்லா வெல்லோரும் பண்பார் மனைபுகுந்து ௨௮௭
நாளைத்தினத் திங்ஙன் நன்றாக வெல்லோரும்
கோழையின்றி வாருமெனக் கோமா னபியுரைத்தார் ௨௮௮
அங்கவ ரதுபோ லவரவர் மனைபுகுந்தார்
பங்கமில்லா நால்வருந்தான் பண்பார் மனைபுகுந்தார் ௨௮௯
நபியு மவர்கள்மனை நன்றாகச் சென்றனரோ
குவியும் பொழுதுதிக்கக் கூண்ட பஜிறுருகுத்தில் ௨௯௦
வந்து தொழுதிருந்தார் வண்மைநபி யைச்சூழ்ந்து
இந்துமுகத்தா ரிருக்கின்ற போதினிலே ௨௯௧
வந்தன் கிபுனியந்தன் மதினத்தனைத் தான்வளைத்தான்
அந்தநகா மதைச்சேர்ந் திருக்குமிடம் ௨௯௨
எண்பதின் காதவழியேகமாய் நாலுதிக்கும்
கண்படைத்தோர் காணரிது கனத்த வவன்படைத்தான் ௨௯௩
கட்டுமட்டாய்த் தானிறங்கிக் கனபேரி வாத்தியங்கள்
துட்டன் முழக்கினது சொல்லுமிடி போல்முழங்கும் ௨௯௪
கடற்போல் முழக்கினின்றான் காதடைக்கு பக்கமெல்லாம்
உடற்போனபேர்களைப்போ லோடினார் மதினமுள்ளோர் ௨௯௫
அந்தத் தருவாயி லாலநபி யென்சொலுவார்
இந்தப் படைதனக்கிங் கேனச் சமுங்களுக்கு ௨௯௬

பயந்திருக்க் வேண்டாகீர் பாரு மொருகிலீவாய்
நயந்திருக்கு மிப்படைக்கு நாமெலீந்தோ மானுக்கால் ௨௯௭

நாடுமழிந்துவிடு நாயனுக்கு பேருது
தேடுந் திரவியமுஞ் சேந்தமனை பெண்டுபிள்ளை ௨௯௮

சாகும் பொழுதிதுகள் தானென்றும் வாராது
மேகம்போல் வரும்படையை வெட்டிஞும் வென்ருக்கால் ௨௯௯

சொர்க்க நகர்கிடைக்குந் துய்யவனுக் கேயுவக்கும்
துக்கமற இப்படையைச்சோராமல் வென்றீரால் ௩௱

அன்பா சொர்கமுமக் ககப்படுங்கா ணென்றுகாத்து
இன்பாக இப்படையை இலேசாக வெல்லணிடுங்கள் ௩௱௧

அல்லா வுரைப்படியே யான்றா தேவிவிட்டோம்
பொல்லாதாவிங்கு போர்ப்படை யோடும்வந்தின் ௩௱௨

ஆதியறிவான்கா ணனவிந்தச் செய்தியெல்லாம்
நீதியோ நாம்பயந்தால் நித்தனுக்கு பேருது ௩௱௩

என்னறக்குந் தான்மவுத்திங் காரு மிருபதுண்டோ
அன்றைக்கு மோட்சமென்னு மழகல்லோ வேண்டியது ௩௱௪

ஓடிநீர் போகவென்ரு லோடவழி எங்குமில்லை
நாடிநீ ரெல்லோரு நன்ரு யொருமனதாய் ௩௱௫

ஆயுதங்களைத்தா னணிந்திங்கே வாருமென்ருர்
பாயும் புலியலிமையப் பண்பாக வேகுவி ௩௱௬

உங்கள் மனைபுகுந்தங் குங்கள்திருத் தேவியர்பால்
தங்குமனச் சம்மதங்கள் தான்கேட்டு வாருமென்ருர் ௩௱௭

ஏதென்று கேட்பதற்கிங் கேதகவற் கூடாது
ஆகென்ற காரியங்க ளாகுமிறை யோனருளால் ௩௱௮

நாய னமக்குதவி நாடோறுந் தந்திடுவான்
ஆபகருமமெல்லா மவனல்லா லாருளது ௩௱௯

நட்டநயம் வந்தாலு நல்மனவிக் கேன்வறுத்தம்
இட்டமுட னுங்கள் திருத்தேவி சொற்படியே ௩௱௰

நடந்துகொள்ளுமென்று நபிதா முரைத்தனரோ
தொடர்ந்தமொழி கேட்டுடனே துய்யமனை யுட்புகுந்தார் ௩௱௰௧

நாச்சியா ரும்மெழுந்து நாய்னவி யைப்போற்றி
மாட்சிபெறு மெம்மாசே மானிலமெல் லாம்பகையாய் ௩௱௰௨

வங்கக்கடற்போல வளைந்திருக்கு மிப்படைகள்
பங்கப்படுங்காபிர் படையேழ் சமுத்திரம்போல் ௩௱௰௩

வந்திருக்கு திப்போது வாத்தமனை வந்ததென்னே
சந்தாட்மென உங்கள்மனந் தானோது சொல்லுமென்ருர் ௩௱௰௪

இந்தப்படை போரதற்கிவ் [illegible]ப்பாவா வேதுசொன்னூர்
அந்தப் படிகடவு மரசே யெல்[illegible]வுரைத்தார் ௩௱௧௫

படைபோக வேண்டுமென்று[illegible] பாவையனாக் கேளுமென்று
விடையருளி னூர்நபியும் வே[illegible]ருந்சொல்லாமல் ௩௱௧௬

தடையில்லா திங்குவந்தேன் [illegible]ங்கயுள்ளோன் தன்பாலில்
அடவுடைய மாதே யழகா[illegible] கையேந்தி ௩௱௧௭

கேளுந் துவாவதனைக். நெ[illegible]ரேத் தோடுநின்று
நீளும் படையைவெல்ல நேர்[illegible]வாச் செய்யுமென்றூர் ௩௱௧௮

பாத்திமா தாம்கேட்டுப் பத்[illegible]கப் பார்த்துரைப்பார்
மாற்றலரை வெல்வதற்கு மா[illegible]ர்கள் சொல்வதென்ன ௩௱௧௯

சித்துவங்க ளுள்ளமட்டுந் தி[illegible]செய்ப லாகுமென்றூர்
சாற்றுமொழி பாத்திமத்துத் தாரூ[illegible]றுவ லாயுரைத்தார் ௩௨௰

பிரசகறுங்குழலீர் பேரான துங்கள்துவா
உரைசெய்யு மூங்கள்துவா உல்லாச மங்கையரை ௩௨௧

மன்றுடிசொர்க்கபதி வாழ்விக்கு மென்றவுண்மை
நன்றாக யாவருக்கும் நயமாய்த் தெரியமென்றூர் ௩௨௨

கணவனு ருரைத்தவுடன் காரிகையா ரோதுரைப்பார்
மணவாளா னின்றிரவில் மாட்சியுட னோர்கனவு ௩௨௩

ஆதியறிவித்தான்கா ணரசே யுகாபார்க்கில்
நீதியுள்ள வென்கணவ நின்களுக்கு வெற்றியுண்டும் ௩௨௪

தாட்டிகத்தி னற்புலியே தான்சிறிது துன்பமுண்டும்
எட்டிலடங்காத இறையோ னுமைககாப்பான் ௩௨௫

வானவர்தஞ் சொற்படியே வள்ளலே நீர்கேளும்
[illegible]ானம்முள்ளீ ரென்றூர் நாயனலி தாமகிழ்ந்தார் ௩௨௬

காவலருடன் பின்னுங் கவலுவார் பாத்திமுத்து
பாவலரும் போற்றும் பாகதியரோ எமமரசே ௩௨௭

துணையான வெம்பாவா சொன்னதுபோல் நீர்கேளும்
மணமாரும் எமபாவா மாட்சியுட னேயிருக்க ௩௨௮

ஆதியருள்பெற்ற அபூபக்க ரும்மிருக்க
நீதியுமறுதுமா னிங்களுமே தானிருக்க ௩௨௯

அசுகாபியார்க ளனைவோருந் தாமிருக்க
ஒருவாக வென்னிடத்தி லுங்கிதுவாக் கேட்கவந்தீர் ௩௩௰

சற்றே சாசமொழி யாற்றினூர் பாத்திமுத்து
கத்த னலிப்புலியார் காரிகையி னேடுரைப்பார் ௩௩௧

ஆணைப்பிறந்தவருக் காலநபி மன்றூட்டம்
கோணு து மாதருக்குக் கோதாய்உம் மன்றூட்டம் ௩௩௨

தீபத்தை யேற்றிவைத்தாற் றீண்டுதேச்சில் தான்வேண்டும்
ஆபத்துவாராம லாதியிடங் கேளுமெனருர் ௩௩௩

சொன்னவுடன் பாத்திமுத்துத் தாய்போலாத் தானினைந்து
பின்னமில்லானைப் பிரியமாய்த் தானினைந்து ௩௩௪

கையை யெடுத்தேந்திக் காரிகையா ரோதுவாப்பார்
ஐயமில்லா தென்புருடர்க் கன்பாக வெற்றியோடு ௩௩௫

வந்த படையைவெல்ல வல்லோனே நீயுதவ
இந்தப்படை யெப்போது மேகனே கண்டதில்லை ௩௩௬

சத்திபல நீகொடுப்பாய் சாற்றுங்காயின் அன்னைமெல்ல
வெற்றி தனைக்கொடுத்து வேதனே காப்பையென்ருர் ௩௩௭

அத்தறுவாயி லாதிமலக் கோர்கமெல்லாம்
பாத்திமா கேட்குந்துவாய் பார்த்திபனே நீகொடுப்பாய் ௩௩௮

காத்தருள்நீ கத்தாவே காரணனே யம்பதியில்
சித்துவமா கவந்த செய்திநற ஞூலம்மத்தில் ௩௩௯

மூவ்வுலகும்போற்று முக்ய அருமதுசேய்
தவ்வுதலில்லாத சங்கைரா வுத்தப்பிள்ளை ௩௪௰

சட்டமுடனுவந்த சகல வுறமுறைய
மிட்டமுடன் வாழ்ந்திருக்க வேகனே நீயருட்செய் ௩௪௧

ஆலநபிமகளா ரன்றிராக் கண்டகறு
சாலப்புகழ்நபிபாற் சாற்றினுரோ புகழ்ந்து ௩௪௨

ஆங்கருமை கேள்மகளே யல்லா வுதவியுண்டும்
வாங்குசொல்லு மோதினுடன் வல்லநபி தாமுரைத்தார் ௩௪௩

நீங்காதவர்தாய் நீதிநபியைப்பணிந்து
பாங்காக அந்தமிலாற் பகர்ந்தார் தெருவெங்கினும் ௩௪௪

கூறியசொற் கேட்டவுடன் கூண்ட அசுகாபிகளும்
மீறியவாயுதங்கள் மேடன் மையுட னேயணிந்து ௩௪௫

வந்தார்நபியிடத்தில் வள்ளல்கால் பேருடனும்
கொந்தால ராலநபி கூடும்படை யோடிருந்து ௩௪௬

சுமானுடையவர்கள் யாவருக்குமாளனுப்பச்
சீமானபியிடத்திற் சேர்ந்தார் படைவீரா ௩௪௭

எண்ணொருபத் தாயிரமபேர் எற்றவர்கள் வாம்பரியும்
திண்ணமுள்ள ராஜாக்கள் சேர்ந்தார்க ளேவெகுபேர் ௩௪௮

நல்லஅசுகாபிகள் நாற்பத்தி ராயிரரும்
எல்லவரு நனனபியை இன்பமுடனே சேர்ந்தார் ௩௪௯

அந்தத்தறுவாயி லாலநபி யேதுவாப்பார்
இந்தொத்த ஆலநபி யின்பமுற ஓர்தாதை ௩௫௰

போருக்குவந்தவன்பாற் போயொருசொல் நீர்கேளும்
நேருக்குநேரான நிச்சயமா மார்க்கந்தனில் ௩௫௧

ஈமானிலேவருக இயம்புமென்று ரேநிறைந்த
பூமானுரைத்திடவே பொங்குடு ளா நற்றூதர் ௩௫௨

செல்லார்குடைநபிதஞ் சீர்பாத மேபணிந்து
நில்லாதுசென்றார் நீசனிபுலியன்பால் ௩௫௩

கண்டாரவனைக் கைகாலெல் லாம்பரத்தங்
கொண்டார் மனத்திலச்சங் கொடுமதி தானமாறி ௩௫௪

விண்டலமெல் லாந்தொழுமே வேண்டாத காபிர்தலை
இன்றிவன்பாற் பேசமெக் கேகுதிடமென்றுநின்றார் ௩௫௫

கண்டானிபுலியந்தன் கத்தனபி தூதரைத்தான்
விண்டானிவடப்வந்த வேற்றூள் நீ யாரோனவே ௩௫௬

தொண்டாக் சொல்லெனவே சூமனவன்கேட்டிடவே
இன்றிவரேடேயுரைக்க வேகாவருட்செய்யென்று ௩௫௭

ஆலைகழிதாதனியான் ஆங்கருமஞ்சொல்லவந்தேன்
சாலவே யாங்கருமந் தானேது சொல்லுமென்றான் ௩௫௮

எங்களுடதீனிலேப்போ எங்கள்நபிநந்தனையும்
பெருங்கடல்போலிருக்கும் புத்திகெட்ட மாந்தனையும் ௩௫௯

கலிமாமொழிகவெனக் கட்டுரைத்தா ரெங்கள்நபி
சலியாதிங்கெங்களுட தயவுள்ளதீனதில்வா ௩௬௰

சீக்கிரத்தி லேகலிமாச் செப்பென்றவருரைத்தார்
தாக்கியவாசொல்லுமொழி தானகேட் டிபுலியந்தன் ௩௬௧

எழிட்டுத்தானபார்த்தா னிரண்டுகண்ணுநீ பெரியக்
கூறிட்டுப்போடுவன்யான கொண்டதூதாகையினால் ௩௬௨

ஒன்றுநான் சொல்வதில்லை யுங்கள்நபிதம்மிடம்போய்
இன்றுவரச்சொல்நீ என்பதத்தி லேபணிந்து ௩௬௩

நன்றுவெங்கள்சாமிதனை நாட்டமுடன கையெடுத்து
வினையணிய நீதா னிப்போதுசென்று ௩௬௪

கூட்டிவருவாய்நீ கூட்டிவாராதேபோனால்
நாட்டையழித்தவினை நன்னபினையத் தான்பிடித்து ௩௬௫

காகப்பருந்தினுக்குக் கட்டாய்விருந்திடுவேன
தாகமுடனேசிறையுந் தப்பாமலே பிடிப்பேன் ௩௬௬

நில்லாதே போவெனவே நீசன்வசை சொல்லினனே
பொல்லாதபாவி புகன்றதெல்லாந் தான் கேட்டு ௩௬௭

கல்லாதபாவியிடம் கழறினர் நபிதூதர்
அல்லாவினதூதர் அருமதிற நூகாமிலை ௩௬௮

பேரல்லாங்கு சொன்னாயே புத்திகெட்ட பேய்மயலே
கல்லதனைக் கும்பிடவுங் கட்டுரைதான் சொன்னாயே ௩௬௯

சொன்னவுந்த னுவதனைத் துண்டுதுண்டாய்த் தானரிந்து
வன்னிதனிற் சுட்டிடவும் வாரார்காணெங்கணபி ௩௭௰

நரகம்புகுதுகிற நாளாச்சு துன்றனக்கு
சிரகமுடனேதான் வீண்பேச் சுரைத்தனையே ௩௭௧

உன்னிடம்நான் வந்ததெல்லா மோதுகிறே னீகேளாய்
தின்னுடைய சேனையெல்லா நேசாலி வாள்தனக்கு ௩௭௨

இதைபோதுமோவெனவே யிப்போது பார்க்கவந்தேன்
துரைமீதி லேபுகழார் தருமநபி மாதுலாராம் ௩௭௩

அதிபராபூபக்கர் அடலுமறு கைவாட்கும்
சிதியுதுமான் வாட்கும் நின்படைத்தான் போதாது ௩௭௪

ஒன்வாளுக் காணாலு மிப்போது பார்க்கவந்தேன்
உன்படையும் பத்தாதிங் குன்னுடலும் பத்தாது ௩௭௫

கபிகையால் மண்ணெறிந்தால் காடெங்கு மூழிவிடும்
புவியிலொழித்திப்போ போய்விடுநீ யென்றுரைத்தார் ௩௭௬

தூதருரைத்தவுடன் துட்டனங்க னேதுரைப்பான்
நீதம்பார்த் தென்செயலாம் நின்றவரைத் தான்கூவி ௩௭௭

இங்கிவனைத் தான்பிடித்தே யிங்குகழுப் போடுமென்றான்
அங்கிவிழித்தெறிப்ப அங்குரைக்க வேவலர்கள் ௩௭௮

தீர்க்கமுடனே சிலபே ரெழுந்தனரோ
ஆர்க்கும் பலனுதவா வங்குசவம் போலநின்றார் ௩௭௯

கைகா லுதவாது கண்டங் கிபுனியந்தன்
வைதா னபியுடைய வஞ்சனைகள் வந்ததென்றே ௩௮௰

தூதர் தனைப்பார்த்தான் தூதரங்கு காணவில்லை
ஏதென் றவன்கலங்கி யெண்ணார்களைத் தானழைத்து ௩௮௧

குதிக்காரர் தன்னையெல்லாங் கூட்டிவர ஆள்விடுத்தான்
வெதிகாரன் சொன்னவுடன் வேணகுதி காரர்வந்தார் ௩௮௨

பதினாயிரம்பேரைப் பண்பா யருகிருத்தி
விதியான தெப்படியோ வேண்டுங்குதி பார்ப்பமென ௩௮௩

கண்டா னிபுனியந்தன் கட்டான வேதியனா
விண்டான் கொடிகளிட்ட வெற்றிக்குதி காரர்களே ௩௮௪

வெற்றிபெறு மோர்படைதான வின்னுங்குதி யேதெனவே
புத்தியுள்ள வேகியர்கள் பொங்குகுதி யேதுரைப்பார் ௩௮௫

அந்தம்பெருமானே யேதுசொல்வோங் கண்டகுதி
சுந்தி யுரைக்கயனங் கூடுதில்லை யெங்களுக்கு ௩௮௬

நபியுடைய தேசமதை நாடியேன் வந்தோமென்றார்
தவியாத வேதியனைத் தாக்காய்ப் பினுநோக்கி ௧௮௭

அஞ்சாது வேதியரோ ஆனகுறி கண்டதெல்லாம்
ஒஞ்சாமற் சொல்லுமென ஓதினனேயுடன் ௧௮௮

பஞ்சான பாடுபடும் பாராசே யுன்சேனை
கெஞ்ச அடித்திடுவான் கெட்டியவி யென்றொருவன் ௧௮௯

எண்ணிக்கை யற்றமனு விறப்பாரவன்வாளால்
கண்ணுக்குக் கண்ணறவ காராவே பட்டுவிழும் ௧௯௦

மன்னுக்குட்சோரி மடைபாய மேகடற்போல்
இன்னிக்கை சொன்னவுடன் தீயெனவே கோபமதாய் ௧௯௧

கல்லாதபுல்லன் கசட விபுனியந்தன்
மல்லர்களைத் தானழைத்து வன்னன வேதியனை ௧௯௨

சொல்லுமெனச் சொன்னான் கொடிய இபுனியந்தன்
சொல்லுங்குறி காரரெல்லாஞ் சொல்லுவார் வேந்தனுக்கு ௧௯௩

விண்டுங் குறைத்திடுவார் வேந்தனே நீகேளாய்
கண்டகுறி சொன்னதற்காற் காவலனே யெம்மரசே ௧௯௪

வண்டத்தனஞ் செயலன்றோ வாழ்ந்திருப்பாய் நீயரசே
இண்டியின் டில்லாத இரலாரு நல்வேந்தே ௧௯௫

உன்சமர்த்தை யாறறிவா ருற்றசமர்க்களத்தில்
பின்சமர்த்தைக் கண்டிடலாம் பேசினதை நீபாரென்றார் ௧௯௬

அப்போ படைத்தலைவ ரானவர்க ளேதுரைப்பார்
இப்போ பொருகளத்தில் எழில்வேதி யனைக்கொன்றால் ௧௯௭

தோசம்வரு மலலாமற் சூழ்பழிமுன் ணுகாது
நீசனதுங் கேட்டவுட னீளகோப மாறினனே ௧௯௮

ஆலநபி தூதனைத்தா னீனவொரும் பார்த்துநின்றார்
நீல னிபுனியன்முன் நின்றார் நபிதூதர் ௧௯௯

காலிதிபுனுவொலிதைக் கண்டா னிபுனியந்தன்
சோலியென்றும் பண்ணுமற் சொன்ன னவர்தமக்கு ௨௦௦

காயகக மாகவென்முன் காணு தொழித்துநின்றுய்
மாயப்பொடிக்கார முகம்மதுவைத் தானவிலை ௨௦௧

ஆளைப்போ லிங்குவர வழைத்துவா நீபோடா
நாளைப்போர் வாராட்டால் நானங்கு வந்திடுவேன ௨௦௨

சீக்கிரத்தில் வந்திடப்போய்ச் செப்பென் றவனுரைத்தான்
தாக்கமுறுந் தூதுவருந் தானங் கிதுவுரைத்தார் ௨௦௩

வேண்டா மழியாதே வேங்காகின் செந்நாயே
வண்டா வுன்புத்தியெல்லா மெங்குவிட்டு இங்குவந்தாய் ௨௦௪

உன்னைபோல் ராஜாக்க ளுலகிலெங்குங் கிட்டார்கள்
பொன்னைபோ லுன்னுயிரைத் போற்றிக்கொ ணீயரசே ௩௱௫

நல்லாங்கைத்தேடி நற்கதியி லேசேரு
பொல்லாங்கு செய்யாதே போம்நரகில் வீழாதே ௩௱௬

அல்லாவின்தூதர் அடிபணிந்து சொர்க்கமுமென்றும்
இல்லாதுபோனுக்கா லின்றழியு மூன்சேனை ௩௱௭

உறுதிநான் சொன்ன தெல்லா முன்னினைவை யுப்பாரு
பொருதியா மென்று சொல்லிப் போனார் நபிதிருமுன் ௩௱௮

சென்றுநபி தாள்பணிந்து செப்பினார் தூதுவரும்
நன்றுநபி நாயகமே நானெங்குங் கண்டதில்லை ௩௱௯

இனில்வர மாட்டான சேனை யெழுகடற்போல்
மானிலமெல்லாம்பரவி வழியிதே நந்நபியே ௩௱௰

விண்ணவர்களும் பயந்து மேனிநடுக்கிடுவார்
மண்ணவர்கள் கண்டால் மடிவார்க ளேயுடனே ௩௱௰௧

சொல்லப்படாத மொழி சொன்னானிபுனியசுதன்
வெல்லப்படாதவனை வேதனினை வெப்படியோ ௩௱௰௨

சொன்னமொழி கேட்டுத் துணிக்கிரு ரங்கிருந்தோர்
மன்னரிறசூலு மனமகிழ்ந்துபள்ளியிலே ௩௱௰௩

அசுகாபிமாருடனு மானநல்ல பேருடனும்
ஓசுவாக வேதொழுதங் குத்துவாத் தானவாங்கி ௩௱௰௪

அபுபக்கரை யழைத்தங் காலநபி யேதுசொல்வார
கபுலத்து வைககாதீர காபிர்களை வெல்வதற்கு ௩௱௰௫

ஆலநபியுரைத்து ஆனநல்ல பள்ளியிலே
சாலவயவர் தம்முடனே படைத்தலைவர் ௩௱௰௬

உத்ததுணை யான ஹலிதிபுனு முத்தாறும்
சுத்தமுள்ள காலிதிபுனு வொலீதும் ௩௱௰௭

சற்றுங்கலங்காத தஇய்யத்துக் கல்வியரும்
மற்றுநிகரொவ்வாத மன்சல்மான் பாரிசுவும் ௩௱௰௮

வல்லபெலமுள்ள வாணரிபுனு தாபித்தும்
நல்லகுணமுள்ள நாதரிபுனு மாலிக்கும் ௩௱௰௯

அன்பமொளவந்த அப்துற் றகுமானும்
இன்பமெனவந்த வெழில்சல்மான் என்பவரும் ௩௱௨௰

அட்டதிசைபோற்று மப்துற் றகீமாவும்
இட்டமுடன்வெட்டுக தீர ரபூசாவும் ௩௱௨௰௧

பத்துத்தலைவர் பண்பபூ புக்கருடன்
கொத்துக்குடையுங் கொடிகள்பத்துந் தானகொடுத்து ௩௱௨௰௨

வெற்றிக்கொடியென்று வேதபூபக் கர்க்கிர்து
உற்றதிறமுள்ள வொன்னலரைக் கொல்வதற்கு ௪௨௩

மோதுபடைக்குதிரை முப்பதி னாயிரமும்
ஓதும்புறவாசர் உண்மைதவ றுதவராய ௪௨௪

முடிதரித்த ராஜாக்கள் முப்பத்தேழ வாயிரரும்
[illegible] நிரையும் கூட்ட மறுபதி னாயிரமாம் ௪௨௫

கொடிவிருது பேரிகையுங் கூடியே முன்னதிர
துடியாக வெங்குஞ் சோதிக்கக் கைவாள்கள் ௪௨௬

வலமாகச் செல்லுமென வள்ளல்நபி தாமுரைத்துக்
கலனணிந்தவெற்றியுமர் கத்தாபைத் தானழைத்து ௪௨௭

சற்றுமெளியாமற் றன்படைக்குச் செல்லுமென
மற்றும்படைத்தலைவர் மாலிக் கிபுனு சின்னூர் ௪௨௮

சிங்கமெனவந்த திறலிபுனு அப்பாசும்
பங்கங்க ளில்லாமற் பாருலகெல் லாமறிய ௪௨௯

பந்தயங்கள் போட்டுவெட்டும் பண்பான மாலிக்கும்
சந்தாபமில்லாத தமீமன் சாரியரும் ௪௩௰

சிங்கமெனபாயஞ் சிரிபுனு மன்சூறும்
அங்ஙும்பா சங்க மியம்புந் திருமதியார் ௪௩௧

ஆன்போற் கொடையுதவு மபூருறைறுவவரும்
நாண்கொண் டடல்பொருதும் நல்லிபுனு சைய்யாதும் ௪௩௨

சத்திமிகவுள்ள சைதிபுனி மாலிக்கும்
தத்தும்படை வெட்டுகின்ற சைதிபுனு தாபீத்தும் ௪௩௩

ஆகும்படைத்தலைவ ராமிவர்பத் துப்பேரும்
வருமெனக்கொடியு மின்பமுடன் பத்தளித்து ௪௩௪

குதிரைபொன்ப தாயிரந்தான் குதிகுதித்து முன்னடக்க
முதிருமுடிமன்னவர்கள் முப்பத்தேழ லாயிரரும் ௪௩௫

ஆதியருளா லறுபதி னாயிரரோ
டோதுமுமறு மூவப்பாக வேமகிழ [illegible] ௪௩௬

வீரமுரசும் விருதுகொடியுங் கொடுத்து
சூரமுடன்செல்லுந் தோன்றுமிடப்பாலிலென ௪௩௭

இடங்கையிற் செல்மென இன்பநபி தாமுரைத்தார்
இடங்கொளுமா றென்னுந் தீரர் மிகமகிழ்ந்தார் ௪௩௮

உதுமான் தமையழைத்தங் கோதுவாராலநபி
சதுமா மறையறிந்தோய் சாருமி ரிப்படைக்கு ௪௩௯

ஆமெனவேகூட வனுப்பும் படைத்தலைவர்
தாமதமில் லாதுவெட்டுஞ் சங்கையுள்ள சானூகும் ௪௪௰

அத்தன்ருட்பெற்ற அன்கவுதல் தவ்வாபும்
உற்றதுணையான உபைதத்து சனூகும் ௪௪௧

எத்தலமுந் தான்போற்றும் இபுனுபசீ ருனவரும்
பற்றலரை வெத்திசெயும் பணயினு யாதாமும் ௪௪௨

சடையாமல் வெட்டுகின்ற சங்கையிபு னுஆசும்
படைக்குச் சடையாத பண்பான இபுனுசலாம் ௪௪௩

நடுக்கமொடு மாற்றலர்க ளோடோறுமஞ்சிடவே
அடக்கிப் படைவெட்டும் ஆணிபுனு சாரிசும் ௪௪௪

தகைமையுள்ள பேர்களிலே சங்கைமிக வுள்ளவராம்
இகலில்நெடும் வாட்சுழட்டும் இபுனு அசுமாவும் ௪௪௫

மற்கட்டும்போரில் மருவலரைத் தாண்டுத்துத்
தற்கமிட்டு வெட்டுஞ் சகலகுண சைதிபுனும் ௪௪௬

படைத்தலைவர் பார்த்துமெய்க்கும் பாங்கருது மானுடனே
இடைக்குங்கொடி பத்துநல்ல கெம்பீர மாயளித்து ௪௪௭

முத்துமணி போற்குதிரை மூவொன்ப தாயிரமும்
முத்திபெற்ற ராஜாக்கள் முப்பத்துமூ வாயிரவர் ௪௪௮

அஞ்சாதகூட்ட மறுபதி னாயிரம்பேர்
ஒஞ்சாதுசெல்ல உதுமா னுடன்கூடி ௪௪௯

சங்கையுள்ள வெற்றிக்கொடி தானுதுமா னுக்களித்து
எங்கும்ப்ர சங்கமுள்ள யிறசூல் முகம்மதுவும் ௪௫௦

பின்னணியாய் வெட்டுமெனப் பெற்றியுட னேயுரைத்து
நன்னயத்தி னேடேநடைத்திவைத்தா ரப்போது ௪௫௧

தாங்கும்படைக்குத் தாங்களுமே போகவென்று
நீங்கா நபிக்குவந்து நீதி அசனுரும் ௪௫௨

பாங்கான நீதிபெறும் பண்பா ருசைனுரும்
வேங்கையைப்போல் நின்று விளம்பினு ரப்போது ௪௫௩

மன்னவர்கள் மன்னன் மாலிக்குகமீ பென்பவரும்
எந்நிலமும்போற்றும் இபல்கச்சா சென்பவரும் ௪௫௪

அமுதமொழியான ஆதியருள் அப்பாசும்
இமிதிமென வாளிவிடுஞ் செல்வர் அமுசாவும் ௪௫௫

மாற்றலரை யஞ்சவெட்டு மன்னர் அகுதாவும்
எற்றவரைக் கைதூக்கு மேந்தல் முறுதியரும் ௪௫௬

சாற்றரிய கீர்த்திபெருஞ் சங்கையபு துல்லாவும்
காத்திரப்பு சிக்குங் கடவுளின் போரலே ௪௫௭

இல்லா தவர்க்குதவு மேந்தல் உசமாவும்
உல்லாச மாகவளர் உவைசுல் கறுனியரும் ௪௫௮

உத்தரி ஞனவர்க்கே புதலிச்குல் மன்னவரும்
மற்றப்ர மத்தரொறு முகம்ம தனிபாவும் ௪௫௯

வாகும் படைத்தலைவர் வாழ்த்தும்பதின் மூவருடன்
வாழுங்கொடி பன்னிரண்டும் வண்மையுட னேகொடுத்து ௪௬௦

நாலுமசு காபியர்கள் நார்ப்பத்தி ராயிரரும்
ரூம்புகழுஞ் சுகமு மிகப்பெருகும் ௪௬௧

தோமா னபியுடனே கூடிநின்று பேரணியாய்ச்
சிமான் அலிதனையுஞ் செய்திறற ரூல்கூலி ௪௬௨

சிமான் தனத்தினரோ சேர்ந்தபடை வெட்டுமெனத்
தாமிதமில் லாமற் றவ்வியே பாய்ந்துலவி ௪௬௩

சூழுங் குதிரையது தோன்றவும் வாயிரமும்
ஆளுகின்ற ராஜாக்க ளாயிரம்பேர் தம்முடனே ௪௬௪

எல்லோரை யும்பாத்தம் நேந்தல்நபி தாமுரைத்தார்
பொல்லாக் கடுங்காபிர் போர்தனிலே போனுக்கால் ௪௬௫

முன்வைத்த காலதனை மோசம்பின் வாங்காமல்
பின்வைக்க வேண்டாம்நீர் பேறுபெறு வீரகளென்றும் ௪௬௬

தங்கள்தங்கள் தீன்னிற் றுன்மனது வைபுமென்றும்
இங்கள்நபி சொன்னவுடன் சித்தமென வேயுவந்து ௪௬௭

சென்றார் படைதனக்குச் சிமா னலியாரும
நன்றாக முன்னிலையில் நாடும் படைபோக ௪௬௮

கம்பர்தனை யலியுங் கடிதாக வேயழைத்து
இன்பமுள்ள துல்துலதை யென்னிடத்திற் றந்திடென்றார் ௪௬௯

என்றவுடன் கம்பர் எழிலாரும் துல்துலுக்குத்
துன்றும்ரத்னக் கல்லணையைத் தாங்கிமுது கில்லிட்டு ௪௭௦

குசையின் மணியணிந்து கூர்காலிற் றண்டையிட்டுச்
இசையப் பணியணிந்தே இன்பமுறக் கச்சணிந்து ௪௭௧

கல்லணையிற் குஞ்சங்களுங் கடிவாளந் தான்பூட்டி
வெல்லவென வாம்பரியை விட்டார லிந்தமுன் ௪௭௨

விட்டவுடன் வாம்பரிமேல் வெற்றியலி தானேறிச்
சட்டமுடன் வீரப்பட்டந் தன்னையெடுத் தணிந்து ௪௭௩

இட்டமுடன் துல்புக்காரச் செங்கரத்திற் றானேந்தி
அட்ட திசை போர்கள் அனுதினமு மெய்க்கும்படி ௪௭௪

முக்கால மும்பணியும் முன்னபீ மாரோடு
எக்கால முள்ள இறைவனபி முன்புவந்து ௪௭௫

அந்தமுட னஙிக்கங் கன்பாகத் தாழ்ச்சிசெய்து
எந்தனக்கின் குத்தாவு இப்போது தாருமென்றார் ௪௭௬

சொர்க்கமெனவந்த துவாவருளி னூர்ப்பிதாம்
சிக்கந்த மகிழ்ந்தலியார் திருவிறைகையத் தான்தொழுதார் ௩௭௭

கொண்டற் குடையார் குதாயலியுன் காவலென்றார்
தண்டா யுதமெடுத்துத் தான்கம்பா பின்வரவே ௩௭௮

பத்துக் கொடியலிமுன் பண்பாக வேபிடிக்கச்
சற்றுங் கலங்காமற் றான்அலியுஞ் சென்றனரே ௩௭௯

ஆலநபி பேரணியி லன்பாகச் சென்றனரே
சாலவே யார்களவர் தன்னணியிற் சென்றனரே ௩௮௰

வானவர்க ளாலநபி மலர்ப்பதத்தைப் போற்றிசெயத்
தீனவர்க ளெல்லாஞ் செறிவாகப் போற்றிவர ௩௮௧

நாலணியாய்த் தான்படைகள் நான்குதிக்குஞ் சூழ்ந்துவரக்
காலணியுந் தாகியதாற் கண்ட இல்லைச் சூரியனை ௩௮௨

மாற்றான் படையருகே மன்னபியும் போய்ச்சேரப்
பார்த்தா னிபுனியந்தன் பாரமலை போலெழும்பி ௩௮௩

மூப்பத்து முக்கோடி மூவர்களைத் தான்முடிமேற்
செப்பத் துடனணிந்து சேர்வேழ மேறினனே ௩௮௪

ஒப்பத் துடனவனை யுண்மைநபி கண்டனரே
செப்ப முடியாத தீயவினியனை ௩௮௫

கண்டுதிரு வாயால் ஹக்கனபி யேதுரைப்பார்
என்றுமுள்ளோ னைப்புகழ்ந்தே யேகனபி தான்வாக்கால் ௩௮௬

சுபுகானல் லாகுவெனத் துய்யகலி மாவுரைத்து
சுபுறக நின்றார்கள் சாற்றுமந்த வேளையிலே ௩௮௭

வேழத்தின் ராஜர்களும் வெம்பரியின் வேந்தர்களும்
காளங்கள் தான்முழங்க காலாட் பெரும்படையும் ௩௮௮

தேர்வேந்த ரெல்லோருஞ் சேரவெழுந் தேயணியாய்
ஆரவே தானெழுந்துங் கப்படையி துள்ளவர்கள் ௩௮௯

வந்து வளைந்தார்கள் வள்ளல்நபி தப்படையைக்
கொந்துலவும் ஆலநபி கூடும்படை தாம்பயந்து ௩௯௰

ஆதியே யெங்களைக்கா ரல்லாவுன் தஞ்சமென்றார்
மாதிரங்க ளெட்டுமொன்றாய் மட்டிட்டுச்சேர்த்தாப்போல் ௩௯௧

காபி ரிபுனியந்தன் கனத்தபடை யுள்ளதெல்லாம்
தாபரமா யேழுசத்த சாகரம்போ லேவளைத்தான் ௩௯௨

வந்த குபிர்ப் படைஞர் மதிக்காமர் சண்டைசெய்தார்
இந்தவிதங் கண்ட விறகுல் படைவர்கள் ௩௯௩

நான்குதிக்குந் தான்வளைந்து நாய்நரிகள் தின்னும்படி
வான்றெறிக்கு மின்னெனவே வாள்வீசிக் காபிர்களை ௩௯௪

வெட்டினார் வாள்வேல் வகைகள் பலவாதும்
இட்டமுட னங்குவந்த திருட்டுக்குபி ரோர்மயங்கி ௬௰௫

இருவர்படைக் காற்றா ளெழப்பொழுதைக் காணாதங்
கொருவர்படை யொருவ ருற்றுணர்ந்து தானறியார் ௬௰௬

வெட்டொன்று கண்டம் ரண்டாய் விழுந்தார்கள் பூமியிலே
துட்டர்மலங்கிவெகு துண்டமதாய்த் தான்விழுந்தார் ௬௰௭

தண்டாயுதத்தலைவர் தண்டமெடுத் தேயடித்தார்
கொண்டாடி வாட்படைகள் கொக்கரித்து வெட்டினரே ௬௰௮

நன்றாக வேலெறிவார் நாடியிரு படையும்
துன்றுங் குதிரர்படை தூளாகிப் போயிடவே ௬௰௯

விற்பூட்டி வாளி விணாவாகத் தானெறிவார்
கற்பூட்டிக் கையிற் கவணும்பிச வேயெறிவார் ௭௰

சக்கரா யுதமெறிவார் சாடுவார் நேரிசங்கள்
உக்கிர கட் டாரிகொண்டங் கோங்கியே குத்திடுவார் ௭௰௧

பட்டையங்க ளெல்லாம் பளீர்ப்பளீரொன் றேதுலங்கத்
தொட்டஇருளுமின்னுந் தோன்றியபோ லத்தோனும் ௭௰௨

இரும்புத்தடியேந்தியங் கிடிபோற் குரல்முழக்கிக்
கரும்பிட்ட ஆலையென்னக் கண்டங்கண்ட மாக்கிடுவார் ௭௰௩

வானந் தெரியாது வன்தூசியெ ழுலிருண்டு
தானமுடன் தங்கள்படை தானறியா ரங்குமிங்கும் ௭௰௪

ஒருவர் படையொருவ ரொன்றையொன்றைத் தானறியார்
இருவர் படையு மெதிர்த்தங் கமர்பொருதார் ௭௰௫

கைதெறித்து வீழ்வாருங் கால்தெறித்து வீழ்வாரும்
மெய்தெறித்து வீழ்வாரு வெங்தெறித்து வீழ்வாரும ௭௰௬

கண்டமு மிரண்டாய்க் கலங்கியே வீழ்வாரும்
துண்டப் படவே துடிதுடித்து வீழ்வாரும் ௭௰௭

வாயைப் பிளந்தங்கு மலர்ந்து கிடப்பாரும்
காயத் துயிர்விட்டுக் கரைந்து கிடப்பாரும் ௭௰௮

மேனி துடியாமல் மேதினியில் வீழ்வாரும்
பாணிபூாணி யென்று பதைபதைத்து வீழ்வாரும் ௭௰௯

பட்டாவுங் கையும் பதைத்துக் கிடப்பாரும்
கட்டான வேல்பிடித்துக் கையற்று வீழ்வாரும் ௮௰

தலையிலிட்ட பாகோடே தாளற்று வீழ்வாரும்
உலையின் மெழுகதுபோல் உருகிக் கிடப்பாரும் ௮௰௧

மலைபோற் றலைகளற்று மாண்டு கிடப்பாரும்
நிலைகளற்று மாமரம்போல் நீள்விழுவாரும் ௮௰௨

பல்லைக் கடித்தாப்போற் பட்டுக் கிடப்பாரும்
வில்லைப் பிடித்தாப்போல் வீழ்ந்து கிடப்பாரும் ௫௧௰௩

பனையானைத் தானினைந்து மாண்டுகிடப்பாரும்
பனைபோலே சாய்ந்து பட்டுக் கிடைப்பாரும் ௫௧௰௪

மக்களொடு மாடமெண்ணி மாண்டு கிடப்பாரும்
ஒக்கவே தான்பிணத்தோ டொளித்துக் கிடப்பாரும் ௫௧௰௫

அம்புதொட்ட கையோடே யற்றுக் கிடப்பாரும்
கும்பிட்ட கையோடே குடற்சரிந்து கிடப்பாரும் ௫௧௰௬

கேடகத்தின் கையோடே கெட்டுக் கிடப்பாரும்
ஆடையுட னாபரண மற்றுக் கிடப்பாரும் ௫௧௰௭

கவண்பிடித்த கையோடே கவிழ்ந்து கிடப்பாரும்
எவண்போய் விடுவமென வங்கிக் கிடப்பாரும் ௫௧௰௮

தலையின்விதி யென்றே தான்றெறித்து வீழ்வாரும்
மலைபோற் புயமறந்து மாண்டேகிடப்பாரும் ௫௧௰௯

சக்கரா யுதங்கள் தானற்று வீழ்வாரும்
உக்கிரமாய்ப் பேசி யுருண்டே கிடப்பாரும் ௫௨௰

கட்டாணி தான்பிடித்துக் கையற்று வீழ்வாரும்
கொட்டாவி விட்டாப்போற் கூவென்று வீழ்வாரும் ௫௨௧

கொடியோடு கைதெறித்துக் கூப்புறவே வீழ்வாரும்
அடியோடு மாலவட்ட மங்கையொடு வீழ்வாரும் ௫௨௨

கொடிபிடித்த கையோடே குவலத்தில் வீழ்வாரும்
தொடையா னதுதெறித்துத் துண்டு படுவாரும் ௫௨௩

பூரியலுங் கையும புரண்டே கிடப்பாரும்
வீரியமெல் லாமிழந்து விழுந்து கிடப்பாரும் ௫௨௪

கருங்கொம்பு தான்தெறித்துக் கையோடே வீழ்வாரும்
வரும்விதியை யெண்ணாமல் மலைந்து கிடப்பாரும் ௫௨௫

சுகராப் பிடித்தகையும் நாணற்றும் வீழ்வாரும்
பகராத சூனமையைப்போற் பட்டுக் கிடப்பாரும் ௫௨௬

தம்பட்டத்தோடுந் தலையற்று வீழ்வாரும்
எம்பட்டோ மென்றங் கிழிவாய்க் கிடப்பாரும் ௫௨௭

பரிசை பிடித்தகையும் பறித்தே கிடப்பாரும்
பிரிசமுடன் வந்தோர் பிணமாய்க் கிடப்பாரும் ௫௨௮

கூனிக் குனவெனவே குப்புறவே வீழ்வாரும்
ஆழிக் கடலிரத்தத் தாழ்ந்து கிடப்பாரும ௫௨௯

பாசைசொல்லி வெட்டினவர் பட்டுக் கிடப்பாரும்
வீசையிற்கை தொட்டாப்போல் வீழ்ந்து கிடப்பாரும் ௫௩௰

ஆசைதனைவிட்டே யலமலர்ந் துருள்வாரும்
பாசமொடு வந்தவர்கள் பாடாய்க் கிடப்பாரும் ௫௧௧

பரியோடு துண்டாகப் பட்டுக் கிடப்பாரும்
நரியோரி தானிழுக்க நைந்து கிடப்பாரும் ௫௧௨

அங்கமெங்குந் தான்வடுவா யலர்ந்தே கிடப்பாரும்
பங்கம்வந்து தென்று பதறியே வீழ்வாரும் ௫௧௩

ஆனையொடு வீழ்ந்தே யலறிக் கிடப்பாரும்
பூனைபோல் வீழ்ந்து புரண்டு கிடப்பாரும் ௫௧௪

சிவிகையொடு தானுந் திரண்டு கிடப்பாரும்
சவிகையொடு கைதான் சழன்று கிடப்பாரும் ௫௧௫

முதுகற்று வீழ்வாரு முகமற்று வீழ்வாரும்
மதுவுறையுந் தோளோடு மாலையொடு வீழ்வாரும் ௫௧௬

தேர்கள்நெருங்கித் தியங்கியே வீழ்வாரும்
காரிடிபோ லானையெல்லாம் கையற்று வீழ்வதுவும் ௫௧௭

சோரிதனி லேமிதக்குந் தோன்றுகுடல் மாமலைபோல்
வாரியெனச்சோரி யடிந்துவெள்ள மோடியதே ௫௧௮

எண்ணிக்கையிற் சொல்லரிதங் கெங்குமே மாண்டபடை
கண்ணிப் பொருததிலே நான்குதிக்கு மேபிணமாய் ௫௧௯

மலைபோல் மலைபோல் மாண்டபிணந் தான்குவிய
நிலையாது ரெத்தாறில் நீஞ்சுமற்றும் யானையெல்லாம் ௫௨௦

தீனேருயிர்கள் சேர்ந்தனவே சொர்க்கமதில்
ஊனுர் குபிரருவி சொயில்நா கில் வீழ்ந்தனவே ௫௨௧

அலியோடு கம்பனையும் அன்றறுக்க வேண்டுமென
நலியா திபுனியந்தன் நன்றாக மேலெழுந்தான் ௫௨௨

வந்தலியைத் தான்வளைந்தார் வாரியென வந்தபடை
எந்தவிதம்பொருவோ மென்றலியுங் கம்பருந்தான் ௫௨௩

ஆனைப் படைகளெல்லாம் அலியைவந்து தான்வளைந்தார்
சேனைப் படைகளெல்லாஞ் சேரவந்து தான்வளைந்தார் ௫௨௪

வஞ்சகமில் லாதலியார்வல்லோனைத் தானினைந்து
குஞ்சரத்தின் கொம்புகளை கூட்டியலி தான்பிடிக்க ௫௨௫

சத்தமிட்டுக் குஞ்சரங்கள் தான்மடிந்த தெண்ணிலையே
[illegible]கத்தைத் தானிழந்து மாண்டகரி யெண்ணிலையோ ௫௨௬

சத்தசா கரம்போற் றான்வளைந்த சேனைகண்டு
கத்தனருட் பெற்றலியார் கையி லிருக்கின்ற ௫௨௭

வாளை யுறைவிடுத்து வன்மையலி தான்சொலுவார்
வகைமுகளே யுங்களுக்கிங் கிப்போது சொல்லுகிறேன் ௫௨௮

இல்லாருக் கஞ்சினவ ரோசும்பன துள்ளவராம்
நல்லார் பயித்தறிகம் நாயினோ ரோர்களெல்லாம் ௫௪௯

அல்லாவுக்காக அறிந்தேன்காண் ஓடிவிடும்
நில்லாம லோடிவிடும் நின்றால் மதிமோசம் ௫௫௰

ஓடிவிடு மென்றலியு முண்மையுட னேயுரைத்துப்
பேடிகளைப் பார்த்துப் பின்னு முரைக்கலுற்றார் ௫௫௧

ஈமான் தரிப்படுத்த எற்றவடி வாளிதுகாண்
ருமான ருதர்களைச் சோரியென வெட்டியவாள் ௫௫௨

அலியார்க்கு வெற்றியைத்தா னன்பாகத் தந்திடும்வாள்
மலிவான காபிர்களை மாட்டிவிட்ட வாளிதென்று ௫௫௩

வீசினு ரலிப்புலியார் மின்வெட்டி ஆர்த்தனபோல்
பாசிக் குளத்தவளை பாய்ந்ததுபோல் துல்லுலது ௫௫௪

செக்காடி வாறதுபோற் செங்களத்தி லேதிரியும்
கொக்காடி யேதிரியக் கூறிட்டார் சேனைதனை ௫௫௫

வெட்டினவாய் தோணுது வீழுக நின்றுபின்னும்
நிட்டெனவே கீழ்விழுந்தாற் செத்தபிணந் தோணுது ௫௫௬

ஆனைபட்ட தெண்ணறியே னரசர்பட்ட தெண்ணறியேன்
சேனைபட்ட தெண்ணறியேன் தேர்கள்பட்ட தெண்ணறியேன் ௫௫௭

வாம்பரிகள் பட்ட தொகை வல்லவனுக் கேதெரியும்
தேம்பி விழுந்தார்கள் ஜெகன்னங்கைநாடி ௫௫௮

தன்னிலே தான்பயந்தே சடையா மனந்துணிந்து
பின்னும்அலிவெட்டியங்கு பிணக்குன்றுய்த் தான்குவித்தார் ௫௫௯

ஆறுகளொத்த மழலாக வோடியதே
மாறுன காபிரொல்லா மாண்டு விழுதல்கண்டே ௫௬௰

வந்தா னிபுனியந்தன் வன்மையலி முன்னாலே
கொந்தாரும் ஆலாபி கூட்டப்படை யுள்ளதெல்லாம் ௫௬௧

கைகால் நடுநடுங்கிக் கத்தனே காப்பாயென்றார்
கைகா லெவ்வநடுங்கக் கண்டங்கலி யேதுசொல்வார் ௫௬௨

ஒப்யார மானவரோ ஒஞ்சாதீர் நீங்களென்றார்
மெய்யாரு நல்லலியார் விளைசாகத் தான்திரும்பி ௫௬௩

எறிட்டுப் பார்த்தார் இபுனியனை யன்னவன்தான்
யாறிட்ட வங்காபிர் மாபாவி தன்னுயிரம் ௫௬௪

அந்தரத்தைத் தொட்டுநிற்கு மானகொடி யோன்சிரசு
பந்தமென நின்ற படைதனிலே தானெருங்கி ௫௬௫

எட்டுமலை யொன்று யிணைந்தது போலேயிருக்குந்
துட்டனிபு னியந்தன் சுறுக்காக வப்போது ௫௬௬

பத்திரமென நின்ற படைதனிலே தானொருக்கிக்
குத்தட்டையும் கோரியெடுத்தான் பிறகு ௩௬௭

தொட்டெடுத்தான் தண்டமதை துய்யவலக்கையதனிற்
கட்டுமட்டாகக் கலன்கள் தனைபொருங்கி ௩௬௮

அடித்தான் தண்டாயுதத்தா லனைபடை வீரர்களைத்
துடித்தார் படைவீரர் சோர்ந்துவிழுந்தேமடிந்தார் ௩௬௯

ஆறுபதினாயிரம்பேரான அடியால்மடிந்தார்
சேருதலைபற்றுத் தியங்கினார் மற்றவரும் ௩௭௰

தப்பநின்றோன்றாதருடன் சங்கைப்படைத்தலைவர்
செப்பத்துடனிருந்தோர் சேர்ந்தார்நல் சொர்க்கமதில் ௩௭௧

ஆறுநால்பேரும் அபூபக்கரும் அல்லாமல் .
மீறும்படைத்தலைவர் வெற்றியுடனே மடிந்தார் ௩௭௨

ஒக்கமடிந்தார்க ளுண்மையலிகண் டிதுசொல்வார்
தர்க்கமிட வேண்டாம்நீர் சாரும்நபியிடமென்றார் ௩௭௩

ஆலிமொழிதப்பாமல் ஆலநபி பாற்சென்றார்
கோலிஇபுளியந்தன் கூண்டவிடக்கை தனிலே ௩௭௪

சென்றான் புளியந்தன் சேரவே தாள்பபர்தார்
நின்றான் தண்டாயுதத்தால் நெஞ்சழன்றுதான்பிடித்தான் ௩௭௫

கொண்டாகிடன்கையிலே கொக்கரித்துவேந்தர்களைத்
தெண்டநிட்ட கூட்டமதிற் சேரவிருப்போரில் ௩௭௬

பங்கப்படுத்துண்டாய்ப் படையிலுள்ளவீரியரில்
அங்கமதுநீறாக றுபதினாயிரம்பேர் ௩௭௭

மடிந்துவிழுந்தார்கள் மாவோடுநீறாகத்
தடிந்துமொழிசொல்லாத சங்கைப்படைத்தலைவர் ௩௭௮

சரிந்துபேரும் இபலுறுமந்தானெதிர்த்தார்
ஆரலியார்கண்டதனை ஆனவுமறைக்கூவி ௩௭௯

செல்லும்நபிபாலெனவே செப்பினாரலிப்புலிதான்
சொல்லுமொழிப்படியே சொருசாரவர்களெல்லாம் ௩௮௰

சென்றார்படைத்தலைவர் சேர்ந்தபத்துப்பேருடனே
வண்டாழுனைப்போல வன்னெஞ்சிபுளியந்தன் ௩௮௧

[illegible]ணியிற்போய்ப்புகுந்து பேருதுமான்கூட்டமதில்
[illegible]ளியெனச்சுழற்றி வளர்தடியினாலடித்தான் ௩௮௨

மண்டிச்சினந்து மாபாவிதானடித்தான்
அண்டியடிபட்டங் கறுபதாயிரமிறந்தார் ௩௮௩

படைத்தலைவர் பத்துடனும் பண்புதும மில்லாமல்
அடைக்கும் படைவீரரத்தனையுந் தான்மடிந்தார் ௩௮௪

ஞ

இறந்ததைக்கண் டாலியவாக் கேத்தடிது மான்றதையும்
அறந்தவழும் ஆலநபி யாருமிடஞ் சார்ந்திடவாரும் ௫௮௫

சார்ந்தார் நபியுடனே தாஹும்பட்டுப் பேருடனே
சேர்ந்தார் ரவியும்அன்று சேத்திலிட்ட பூசலிலே ௫௮௬

கல்லாத புல்லன் சடனிபுனி யந்தான்
பொல்லாத பாவியவன் போந்தான்கைத் தண்டமதால் ௫௮௭

முன்னணியில் நின்றவரை மோரியே தானடித்தான
மன்னவர்க ளாயிரு மாண்டார்கள் போர்களத்தில் ௫௮௮

ஆகாதகேட னசடன்பின்னும் தானடித்தான்
மூவாயிரங் குதிரை மோட்சமுட னேமடிந்த ௫௮௯

அலியாருங் கம்பரல்ல லாகுபேர் தாமடிந்தார்
நலியாது நிற்கையிலே நானுங்களி டஞ்சொல்லுவேன் ௫௯௦

ஆனதனை வெட்டு மலியார்தா முப்போது
இணையறியாத சிரகேடேன் றன்றிவெல்ல ௫௯௧

கம்பர்தனைக் கூவிக் கண்முழிப்பர் நில்லுமென்றன்
கெம்பிரான் தந்தவரு ளென்னைவிட்டு நீங்காதே ௫௯௨

நீங்காமற் கம்பரப்போ நெடியோன் றனைநினைந்து
பாங்கான ஆலநபி பார்த்தார் படையதனை ௫௯௩

சுற்றும்வெள்ளம் போலவிற்கத் துய்யோனை யெனினைந்தார்
கர்த்தனரு ளால்ஹிபுரீல் கடுகவே வந்திறங்கி ௫௯௪

மாண்டவருக் காக மயங்குவதேன் நன்னபியே
ஆண்டோன் கிருபையா லவர்சுவனம் பெற்றதென்றார் ௫௯௫

வேணபடி தேறுதலை விளம்பிவிண்ணி லேயுகுந்தார்
காணரிய வெற்றியுள்ள சுத்தனிற ஆலநபிதாம் ௫௯௬

அந்தமொழி கேட்டவுட னுதிநபி தோழருக்கவ்
கெந்தவித மாளுலு மேசுனரு ளென்றுரைத்தார் ௫௯௭

மூந்தஅவன் தண்டமதால் மோதினன் கம்பர்தனைச்
சந்தரப மில்லாதலீ தான்தாட்டினார் தண்டமதால் ௫௯௮

தட்டின தண்டமோடி நபி தம்படையி லேவிழுந்து
கெட்டியுள்ள நல்லி கிருபைக்கடலான ௫௯௯

ஆனைபி தப்படையி லநேகம்பேர் மாண்டார்கள்
மேலவர்கள் நல்ல வெற்றியொடு மேசுணமார் ௬௱

தாவமதிற் பட்டவர்கள் தாவினறயோன றன்னருளால்
கோல மிகுந்திருக்குங் குடியான சொர்க்கமதில் ௬௱௧

பச்சைப்புறுப் போலே பண்பான சொர்க்கத்திலோர்
இச்சையுள்ள கூடில்கி னேந்திழையா கொண்டுசென்றார் ௬௱௨

காபிர்படை மாண்டவரைக் கைச்சங் கிலிவிலங்கும்
திபர்முமார்காகிற் சேர்ந்தார்கள் ஷாபிரெல்லாம் ௯௱௩

பாலன் தனக்காசர் பண்பான் அலிப்புலிதாஞ்
சாலவே யாலியவர் தன்படையைப் பார்த்துரைப்பார் ௯௱௪

மின்றலே கில்றுமெனப் பேசலிதான் முன்னிருந்தார்
மன்னவன் காவலிலே மன்னாலி கம்பருந்தான் ௯௱௫

தண்டாயுதமெடுத்துத் தக்கோனைத் தானினைந்தே
அண்டா இபுனியந்த வடிமார்பிலேயெறிந்தார் ௯௱௬

எறிந்ததண்டம் போயந்த விபுனியந்தன் மார்பில்விழ
முறிந்ததுநூறாக மூடனுமப் போசிரித்தான் ௯௱௭

எள்ளத்தனை போலவந்தா யென்னடா வுன்பெயர்தான்
முள்ளுக்குட் சீலையிட்டே மோதிவலிக் கின்றாய்நீ ௯௱௮

உங்களைகாண் கொல்வதில்லை யுங்களலி தன்சமத்தை
இங்கல்லோ காணவந்தேன் என்னிடத்தில் நீங்கள்வந்து ௯௱௯

குண்டுசட்டி தன்னிற் குதிரையை யோட்டினீரோ
கண்டிடுவோ ரோவெனது கண்ணெதிரே வந்தாக்கால் ௯௱௰

அன்றறிய லாஞ்சமுத்தையாலியென்ற போதனை
இன்றொளித்துப் போனுக்கால் யான்விடேன் கண்டாயே ௯௱௰௧

அடையாளம் நானறிந்தால் ஆலிதனைவென்றிடுவேன்
மடையாபோ யுன்னலியை மண்டியிங்கே வந்திடச்சொல் ௯௱௰௨

என்முன்னே வாராட்டால் இப்போ பதிபுகுந்தங்
குன்னகரைத் தானழித்திங் குள்ளசிறை யும்பிடிப்பேன் ௯௱௰௩

ஆலிதலை யறுத்திங் காலனபி யைப்பிடித்துக்
கோலியே கொன்றிடுவேன் கொள்கைதனைப் பார்நீயென்றான் ௯௱௰௪

பாருமென்றபோதே பகர்ந்தா ரலிப்புலிதா
மோருமெனவந்த மிலேச்சனீ கேட்டிலையோ ௯௱௰௫

இக்கா லறிந்திலையோ என்பெயர்நீ கேட்டிலையோ
அன்னாயம் தான்வளர்த்த அலிப்புலிகா னென்றறியாய் ௯௱௰௬

உன்னூரைத் தேடிவர வுற்றிருக்கும் வேளையிலே
என்னூரைத் தேடிவந்தா யென்கையா லேமாள ௯௱௰௭

முருக்குப்பூந் தென்செய்யு மோதுதா னாகிடுமோ
எருக்குப்பூத் தென்செய்யு மேறுமண மாயிடுமோ ௯௱௰௮

கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ காபிரேற்
சொல்லெல்லாந் துட்சணச்சொற் சொன்னாற் பலனேது ௯௱௰௯

ஆனைவெகுபார மடுசிங்க மெவ்வளவோ
தானையெல்லாம் வீரியன்காண் தான்சிறிது வீரருண்டோ ௯௱௨௰

கத்தியெடுத் தென்செய்யக் கத்தாளே வெட்டுவையோ
புத்தியுள்ள ராஜனல்லப் போர்செய்ய வீட்டடயே ௯௨௧

கல்லைப் பிளப்பதுவுங் காளுஞ்சிறு சிற்றளீதான்
எல்லைக்கல் காட்டினபோல் எதிர்த்தா யானையின்மேல் ௯௨௨

புத்துக்காளுஞ்சிறுசிற் போத வணிந்துவந்தாய்
செத்துவிடப் போறாய்நீ சேக்கிரத்திற் கிறிறங்கி ௯௨௩

மற்றொன்றும் பேசாமல் வந்தெனது காலில்விழு
வெற்றியுண்டு மென்றே வெகுசாகசசொல்லினளே ௯௨௪

பாதப்பணி யென்றே பகர்ந்தா ரலிப்புலித்தான்
போதமழிந் தவர்போற் பொங்கி யியுணியந்தத் ௯௨௫

நீதமோசொன்னாய் நிகழ்க்குறிறே னோர்வசனம்
காதவழி விலகு கண்டதுண்ட மாக்கிடுவேன் ௯௨௬

அலியைவரச் சொல்லடா ஆகாத நீயிருவன்
பெலிபிட்டுப் போடுமுன்னே பேசா யெனைவணங்காய் ௯௨௭

கண்டதுண்ட மாக்குமுன்னே காலில்வந்து கும்புடுநீ
இன்றுமுண்டு பேசாதே செத்திடுவாய் நீயேழை ௯௨௮

அண்டருலகம் அழிந்துவிடும் நான்பொருந்தால்
உண்டோதான் சத்தியுனக் குன்னலியை வந்திடச்சொல் ௯௨௯

அலியிது கேட்டுடனே யங்கவனைப் பார்த்துவீரர்
கோலிமலை போலுயர்ந் கொண்டாய்நீ யென்றனக்கு ௯௩௰

கொசுகுபோ லாகுமிந்தக் குவலயத்தி லேநீயும்
பிசகாமல் வந்தெனது போடிமி லேவிழுவாய் ௯௩௧

காலைநீ தானிருக்க நாட்டமில்லை யோவுனக்குச்
சாலையம்வந் தொட்டுமுன்னே தானெனது காலில்விழு ௯௩௨

பாதம்பணி யென்றமொழி பாரிபுனி யன்கேட்டு
எதடா நீதா னிடும்புமெத்தப் பேசுகிறாய் ௯௩௩

குறும்புமெத்தப் பேசுகிறாய் கொண்டடித்த முன்னேடோசொல்
எறும்புபூத் தாப்போல்நீ யென்முன்னேநின்றுகொண்டாய் ௯௩௪

அலிநீ தானேயின் னாராலும் வேறுமுண்டோ
சோலிவருத்தாயே சொல்லடா வனபேனா ௯௩௫

உண்மைசொல்லி விட்டிப்போ தோடிப்போ வுன்பதிக்குத்
தன்மைவருமுன்னே சாற்றுனது போதனை ௯௩௬

என்று னிதுகேட் டியம்புவா ரலிப்புலி
நன்றாக விவ்வுலகம் நான்கிடந்த மேபுகழார் ௯௩௭

ஆசிம்இனையின் அபித்தாலிப் புத்திரன்யான்
தாசீம்மு கம்மதுக்குக் கன்னான நன்மருகன் ௯௩௮

அலியெனப்பேர் கொண்டவனு மங்குவே ஞயனுக்குப்
புலியெனவே தான்பாய்வென பேரில்வந்த காபிர்களை ௬௩௯

காலிலிட்ட சோட்டினுக்குங் காணுமே கீழுடா
தாலியுன்றன் தேவியாக்குத் தானிருக்க வேண்டுமென்றான் ௬௪௰

ஆசைவிட்டுக் கீழிறங்கி யன்பாக எக்கலிமா
வாளிலுயிர் போகுமுன்னே மவுன்றியதனச்சொலித்த ௬௪௧

நீளிலையில் நீவருவாய் சேரமன மில்லாட்டால்
நாளிலெயெல் லாமழிய நவிலுமெந்தன் வாளாலே ௬௪௨

உன்னை வதைத்திடுவே னுன்சடந் தானரகிற்
பின்னிவிழு மென்றார் பேயனிபுனியந்தன் ௬௪௩

ஆலியென்ற பேர்கேட்டங் கப்போ தவனகைத்துக்
கூலிக்கு வேலைசெய்வோன் கோடாமே லேறிவந்தாய் ௬௪௪

பெருப்பமாய்ச் சொன்னதெல்லாம் பேயாநீ யெவ்வளவோ
நெருப்புகளில் வீழ்ந்தபுழு நிற்குமோ நீயெனக்கு ௬௪௫

அறுவாகத் தோற்றுமிப்போ தங்கையர் தலைப்பிடித்து
இறுக்கா யிறுங்கிடுவே னெந்தனுட கையதனால் ௬௪௬

வாயிலைவார் திணக்கல் வான்மட்டும் நீபறப்பாய்
தேயுகாசன் வந்தெதனச் செங்கைகொட்டி யேசிரித்தான் ௬௪௭

வங்கணிற் றீயெழும்ப வன்னெஞ்சு தான்சினந்து
செங்கண் நெருப்பெரியத் தீக்கருள்ள தண்டதனால் ௬௪௮

அடித்தா னலியின்மேல் அலிதுல்புக்காறுவாளால்
தடுத்தார் பரிக்குசைய தானெகிழ்த்தா ரப்போது ௬௪௯

அண்ட ரண்டமுங்குலுங்க வார்ப்பரித்து வாம்பரிதான்
வண்டனுட யானையைத்தான் வலமிடஞ்செய் தேகுதிரை ௬௫௰

கொண்டலவனாக்குங் குதித்தே சுழன்றுவரும்
விண்டிடமுன்னாலே வெகுதூரஞ் சுற்றிவரும் ௬௫௧

பாயுங்குதிரையிந்தப் படிவரவே யந்நேரம்
வாயுமாத்தபொல்லா வன்கண் இபுனியந்தன் ௬௫௨

அன்றைந்து பார்த்தான் அவன்தலைக்கு மேலுயரும்
விண்ணோர்க் கிபுனியந்தன் வேறுவினை வாயுரைப்பான் ௬௫௩

பறக்கவிறகுமில்லைப் பார்த்தாற் குதிரையிது
துறக்கப் பறக்குதுகாண் சூறு வளிபோல ௬௫௪

சுன்றுன இப்புதுமை நானிலத்திற் கண்டதில்லை
இன்றேயவிபரீத னென்கையால் மாளுமென்றான் ௬௫௫

மாளுமென்ற சொற்கேட்டு மன்னரலி தம்பரிதான்
நாளுமுனைக் காச்சுதென நாழமனர்தனிலே ௬௫௬

பழமெல்லாம் வென்ற விபுனியனை யிப்போது
ஊழிமுடிவாற் கொள்ள உற்றகரி மத்தகத்தில் ௯௫௭
பந்தாடற் போல்மிதிக்கப் பார்த்தா னிபுனியந்தன்
பிந்தாது தும்பிகொம்பிற் பேராய நடனமிடும் ௯௫௮
அடிவயிற்றி லேமிதிக்கு மந்திரத்தி லேபாயும்
துடியுடனே யங்கவன்றன் தோள்மீதி லேகுதிக்கும் ௯௫௯
ஆனைமுன்னே வந்துநிற்கு மாராய்ந்து தாநிற்கும்
தானைகளைத் தானுழக்குஞ் சட்டமுடன் சத்தமிடும் ௯௬௰
வலசாரி சுற்றிவரு மற்றுமிட சாரினிற்கும்
பெலமா யரசனுட பின்முதுகி லேகுதிக்கும் ௯௬௧
வேந்தன் விலாப்புறத்தில் விட்டிற்போ லேயுதைக்கும்
மாந்தரொல்லாந் தானே மலைக்கமண்ணி லேகிடக்கும் ௯௬௨
வானத் தளவுசெல்லும் வந்துதும்பி வால்மிதிக்கும்
தானமுடன் வானமட்டுந் தானுயரும் பூமியிலே ௯௬௩
மலைபோல வேதாவு மன்னனையுஞ் சுற்றிவரும்
அலைகடலைச் சேருக்கு மானைமுன்னே வந்துநிற்கும் ௯௬௪
கம்பர்தனை யாலி கடுகவே தான்கூவி
எம்பரியின் வால்பிடித்தே யெம்பிறகே நில்லுமென்றார் ௯௬௫
இல்லாதுபோனா லிபுனியந்தன் கொல்வனென்றார்
சொல்லா னதுகேட்டுத் துய்யபரி வாற்பிடித்தார் ௯௬௬
கோடைமழை போல்வாளி கோர்த்தா னிபுனியந்தன்
வாடையுடன் சூறை வளிக்காற் றெனச்சொரிந்தான் ௯௬௭
ஆலிமேல் விட்டகணை யத்தனையும் வாளாலே
கோலி யறுத்துவிட்டுக் குஞ்சரத்தைச் சுற்றிவந்தார் ௯௬௮
ஐங்கதியைத் தான்காட்டி யாகாசத் தேயுயரும்
பைங்கிளியார் பாத்திமத்துப் பார்த்தாதம் வாம்பரியை ௯௬௯
வாற்பிடித்துக் கம்பரப்போ வவ்வாப்போற் றூங்குகிறார்
கோற்பிடித்தங் கெய்தான் கொடிய இபுனியந்தன் ௯௭௰
தறைபடியிற் றன்சிரசிற் றட்டென்று கால்மிதிக்கும்
முறைபிடும்பின் யானை முழக்கமிடி போல்முழங்கி ௯௭௧
உல்லாச வாம்பரியு மோடியுய ரப்பறக்கும்
பொல்லா திபுனியந்தன் பொங்குசிர மேல்மிதிக்கும் ௯௭௨
அந்தரத்திற் செல்லயிலே அம்புதொடுத் தான்கொடியோன்
வந்தகணை யாலி வலக்காற் கணைக்காலில் ௯௭௩
தைத்ததுகண் டாலியவர் தன்கைவாட் டன்னாலே
பொய்த்தனும்பு வெட்டாகப் போரலிதாம் வெட்டினரோ ௯௭௪

வெட்டியவ ரங்கவன்றன் வீரமுடி மேற்படவே
கெட்டிவந்தபுத்துங் கிரீடமுடி யத்தனையும் ௯௭௫
சிரசில்வைத்த முப்பத்து முக்கோடித் தேவதையும்
அரசுவைத்த ஆபரண மத்தனையுந் தானறுத்து ௯௭௬
நிலத்திலில் வீழ்த்திடவே நெஞ்சழன்று தான்கொடியோன்
பெலத்தை தவிட்டுத் தரன்பயந்து பேச்சொன்று பேசலுற்ருன் ௯௭௭
எத்தலத்தைப் பார்த்தாலு மிவன்கணைபோற் ருேணுதுகாண்
உற்றதில ஞென்றேபின் னுள்ளவசொல் லாமலியோ ௯௭௮
கப்பசொருவன்பேர் கண்டதிசை யெங்குமுண்டோ
உம்பரிவனைக்கண்டா லோடி யொளித்திடுவார் ௯௭௯
வாளிவிட்ட தெல்லாம் வாள்தனக்குக் கிட்டவில்லை
சூழும் படைக்களத்திற் றனுக்கேது மில்லாமல் ௯௮௰
குஞ்சரத்தின் கோடுவெட்டிக் குவித்தான் மலைபோலே
அஞ்சாத வேந்தாகளை யறுத்துமலை போற்குவித்தான் ௯௮௧
பஞ்சாக்க வேண்டுமெனப் பாழா விபுனியந்தன்
மிஞ்சவே தன்னுடைய மீசைமுறுக் கிக்கொண்டு ௯௮௨
மீறியவி முன்னாலே வேழக்கை யாய்நடந்து
கூறித்தன்பேரைக் கூப்பிட்டுச் சொல்லலுற்ருன் ௯௮௩
மீளாதே நீயெளிமை மாவிடரிற் சின்னவனே
ஆளாயிப் போய்விடுமுன் னுட்சணமே போய்விடென்ருன் ௯௮௪
வாயிலுனைபடிப்பேன் வந்திடாய் நீயிலென்ருர்
நேயரவி சொன்னசொல்லை நீசன்தா னேகேட்டு ௯௮௫
நீனி லைமுக்கிறையோ செப்புவேன் கேளெனவே
மானமுடன் வந்தே மன்சாமியைக் கும்பிடலுற்ருன் ௯௮௬
கேடனுரைத்தசொல்லைக் கெம்பீ ரவிகேட்டுக்
கோபமுடைத்தான் தட்டிக்கோப மிகவாகி ௯௮௭
ஆதி கபிலை யழகாகப் போற்றிசெய்து
மாதிரங்க ளெல்லா மண்ணைதிரத் தான்பாய்ந்து ௯௮௮
துல்புக்கறை யோங்கித் துட்ட விபுனியந்தன்
மல்லுறும்புயத்தில் வாளியே வெட்டினரே ௯௮௯
வெட்டியவா ளவன்தோளை விரியக் கிழித்துநிலக்
தட்டிக்கீழோடிடவத் தருவாயி லேயாறி ௯௯௰
உத்தரவு வானவர்க்கன் குண்டான தாலிபின்வாள்
பெத்தப்பிலத்தில் வீழு மிறக்குமுன்னே ௯௯௧
சோலியொன்றும் பாராமற் சுறுக்காய்ப் பிடியுமென்றே
வலியோ னுரைத்திடவே வாளாகோ ளச்சணத்தில் ௯௯௨

கல்லுப் பிளக்கவெட்டுங் காரணர்வா ளானதனை
வெல்லுந்திறத் தாலியுட வெற்றிவா ளானதனை ௬௩

ஏந்தினர் தன்சிரகா லேந்தலலி வாளதனைச்
சார்ந்துசிற கேந்தித் தன்சிரசி லோர்துலியும் ௬௪

சுழமதாகல்லி லிடுவதுபோற் றன்மனுவாய்த்
தாழவும்பின் செல்லாமற் றுங்கினர் வானவரும் ௬௫

வாளதனைத் தாங்காட்டால் வள்ளலலி வாட்படிலோ
தாருதா ளாகச் சுற்றுமட்ட கோணங்களும் ௬௬

சோரிடிந்துவிடு மிக்கெங்கும் போயிவிடும
கூருந்திரிகையெனக் கொக்கரித்து வாம்பரியும் ௬௭

வானி லெழும்பியதால் வாளை யலியெடுத்தார்
மானிதமா ராலியின்வாள் வலக்கரத்தி லேபுகுத ௬௮

பூமி யதிர்ந்துரைக்கும் போரலியே யென்னிடத்தில்
நேமிதமாய் நீர்வருகால் நிச்சயமாய்க் கேட்டிடுவேன் ௬௯

அன்றைக்குக் கேட்பே னதுநிசமென் றேயறியும்
என்றைக்குமுன்பா லிறையானை வாரதில்லை ௭௰

றலியுரைத்தனராங் கப்படையில் மீந்தவர்கள்
சோலிவருத்தாமற் றய்யவலி தாள்பணிந்தார் ௭௧

றலிபதம்பணிந்தங் கவர்களதி ரனபின்னர்
சிலரலியார் செப்பினு ரங்கவர்பால் ௭௨

உங்கள் மனதிப்போர் தொத்துதோ வென்றதற்குச்
சிங்கப் புலியலியே சேர்ந்தோம்நும் பாதபதால் ௭௩

வானில்வழி காட்டாமல் வந்தவனைக் காருமென்றார்
தீனில் வருவோங்காண் சிங்கமே நாங்கள்முன்னே ௭௪

கலிமா வுரையுமெனக் கட்டுரைத்தார் நல்லலியார்
ஒலியா னவருரைக்க வுடனேதீ னுனர்கள் ௭௫

நாக மதிற்புகுதும் நஞ்சிபுனி யந்தன்சிரம்
விரக ரூட்டறுத்து வெற்றிக்கம்பர் கைக்கொடுத்து ௭௬

தீனுனவ ருடனே சென்றார் நபிதிருமுன்
வானுடர் போற்று முகம்மதுற சூல்நபிதாம் ௭௭

அலியை மிகத்தழுவி யங்கைதனைப் பிடித்து
வலியோ னருள்மிகுதி லாசமுடனேபெறுவீர் ௭௮

வச்சிர மேனியென்றும் வல்லோன் தருவானென்று
மெச்சி மகிழ்ந்து மேனியெல்லாந் தான்தடவி ௭௯

சொல் லொண்ணுச் சந்தோஷந் துலாயா முகம்மதுவும்
கல்பதனிற் கொண்டுநின்றார் கழறுமந்த வேலையிலே ௮௰

வேண்டார் திபுனியந்தன் வீரமுடி யானதுவைக்
கூண்ட சபைநடுவே கொண்டுவைத்தார் கம்பருந்தான் ௭௱௰௧

பாரமலே போன்முடியைப் பார்த்தலியைத் தான்மகிழ்ந்து
சூரன்முடி தன்னைமிகத் தாவணித்தங் கெல்லவரும் ௭௱௰௨

வெற்றியபூ பக்கருமர் வேதருது மர்ளரும்
சத்தனலி யைத்தழுவிக் கையெடுத்துக் கண்ணில்வைத்தார் ௭௱௰௩

சித்தம் புறக்கானின் னெண்ணயக்கள் மாறுத
மற்றுள்ள காபிகளு மன்னரலி யைப்புகழ்ந்தார் ௭௱௰௪

ஆலிதமை மகிழ்ந்தங் கால்கபி யுப்படையும்
பாலி யடனெழுந்து பத்துக்கொடி யும்பிடித்து ௭௱௰௫

வந்தார்கள் மக்கமதில் வள்ளல்கபி யுந்திரளும்
சந்தாத பள்ளியிலே நாடியே போயிருந்தார் ௭௱௰௬

ஆலகபி தம்படையி லமர்களத்திற் பட்டவர்கள்
போலமுள்ள சீர்த்தி யொருலக்கம் ராஜாக்கள் ௭௱௰௭

எண்பதினு யிரங்குதினா யேகமாய் மாய்ந்ததென்றார்
கண்படைத்தோ ரியாருங் கடும்பதுமை யாமிதென்றார் ௭௱௰௮

மடிந்தமனு வத்தனையும் வல்லோ னருளாலே
இடந்தருஞ் சொர்க்கத்தினிற் சேர்வரென்றார் நங்கபிதாம் ௭௱௰௯

ருதியின் கற்பனையை யார்தடுக்கத் தான்கூடும்
நீதியுடன் மாண்டவர்க்கு நிட்சயம்பொன் னூரென்றனர் ௭௨௰

ஓதினர் யார்களுட னுண்மைநபி யப்போது
நீதியுள்ள யார்கள் நேசமுற்றார் பின்புநபி ௭௨௧

எண்ணியெண்ணி யுள்மனதி லேதும்வெளி பேசாமல்
திண்ணமோ டிறந்தவர்க்குச் சீர்துவாச் செய்தனரே ௭௨௨

ஆலிகணைக் காலிருந்த வம்புதனைக் காட்டினரே
காலிலே தைத்தவம்பைக் கத்தனபி கண்டுசொல்வார் ௭௨௩

அம்பைப் பிடுங்குமென வபூபக்க ரோடுரைத்தார்
தப்பமென எழ்ந்தார் தைத்தகணை வாராது ௭௨௪

கணையைப் பிடுங்குமெனக் கர்த்தருமை ரோடுரைத்தார்
அணைத்துருவப் பாய்ந்தஅம்பை யாகூட்டுந்தானிழுத்தார் ௭௨௫

வாராது கண்டுநபி வன்மையுது மான்வலி
நீராயி லும்பிடுக்கும் நீதியரோ வென்றுரைத்தார் ௭௨௬

உதுமானு மப்போ தூண்மைநபி சொற்படியே
சதுமா மறைதெளிந்தோர் தாமிழுத்தா ரம்புதனை ௭௨௭

கணைக்காலிற் றைத்தவம்மைக் கண்டமட்டுந் தானிழுத்தார்
பணைக்கா லுறைப்பக்கணை பறிபடா திவராலும் ௭௨௮

சத்திமெல்லாங் கூட்டித் தானிழுத்தார் வாராது
வெற்றி யலியை வேதனபி தாமனழுத்து ௭௨௯

தக்குபீர் கட்டிந் தான்றெழுமென் றாலியை
கக்குக் கடலுருகிக கத்தனலி தான்தொழுதார் ௭௩௰

பின்னுமந்த மூவரையும் பிடுங்குமென்று ரம்புதனை
மன்ன ருனாத்தவுடன் மறுத்துமிழுத் தார்களவை ௭௩௧

வாராது வாளியது வரிசையலி யார்தொழுதார்
தீர விதத்துடனே சிங்கவலி யார்தொழுதார் ௭௩௨

வெற்றிக்கொடிப்பிடித்த வேந்தரொல் லாரையுமே
சித்திர மனைக்கேகச் செப்பினார் நபிதாம் ௭௩௩

தங்கள்தங்க ளின்மனையிற் றன்புகுந்தா ரெல்லோரும்
பொங்கமுறும் நந்நபிதாம் புகழாக வேயிருந்து ௭௩௪

போர்களத்தின் மாண்டவர்க்குப் புகழாகவேசிறப்பாய்
ஏர்க்குகின்ற கத்தமொடு மியல்பாய்ச் சடங்குசெய்து ௭௩௫

மவுத்தா னவர்களுட மங்கயர்க ளெல்லவர்க்கும்
கவுத்துவமொன் றில்லாமற் கனகம் பணிமணிகள் ௭௩௬

மாலுடனே தான் கொடுக்க வைத்துமா லோர்க்குனாத்தார்
எல்லமட்டு மவர்வாங்கி யேகன்தனைப் புகழ்ந்தார் ௭௩௭

ஆல நபியு மவர்கள்மனை போயிருந்தார்
சாலவெவர்களுமே தங்கள்மனை போயிருந்தார் ௭௩௮

பாவி யிபுனியந்தன் பட்டதுவு மாட்படைகள்
தாவியே போரிற் றன்மடிந்த வாறதுவும் ௭௩௯

கேட்டரசன் தேவி கிலேசமுற்றுத் தானெழுந்து
தாட்டிகமெல்லாம் விடுத்துத் தன்மகனைத்தானெடுத்து ௭௪௰

ஒக்கலையி லேற்றிக்கொண் டுடன்கூட்டத் தோடெழுந்தாள்
மக்கத்தை நாடியந்த மாமயிலுங் கூட்டமிட்டாள் ௭௪௧

பழிவாங்க வேண்டுமெனப் பாலகனோ டேபாவ
வழியா னதைத்தொலைத்து வஞ்சிசில நாட்கழித்து ௭௪௨

சென்றாள் படைக்களத்திற் சேர்ந்த மகனோடுங்
குன்றானதுபோலக் கூண்டவினங் கண்டனளே ௭௪௩

ஐநூறுமாமுழத்தா னறுநூறு துண்டாக
மெய்நூறித் தான்கிடக்கு மேனிதன்னைக் கண்டனளே ௭௪௪

மைந்தன்றனை யிறக்கி மன்னவன்றன் காலடியில்
நைந்து விழுந்தழுது நன்றாய் முகத்தறைந்து ௭௪௫

கொந்துறையும் பூங்குழலாள் கோகோ வெனவழுது
அந்தங் குறையவலளடங்காத துன்பமுற்று ௭௪௬

கைளய முகத்தறைந்து கண்ணீர் மிகச்சொரிந்து
ஐயோவென் கண்ணே யனியாய் மோவிதுதான் ௭௧௪௭

வந்து மடிந்திரோ மன்னவரோ யென்றழுதாள்
ஈந்தி மடிந்திரோ நாதரோ யென்றழுதாள் ௭௧௪௮

எதுசெய்யப் போறேனென் றேங்கி விழுந்தழுதாள்
வாதுசெய் களமதிலே மாண்டீரோ வென்றழுதாள் ௭௧௪௯

ஆரனப் போருர்க் காயகோ வென்றழுதாள்
சோரர் களமதிலே சென்றீரோ வென்றழுதாள் ௭௧௫௦

இபுனியந்த னென்றுபேர் ரெடுத்தீரோ வென்றழுதாள்
அவனிதனில் நான் தனித்தே னைய்யோ வென்றழுதாள் ௭௧௫௧

பந்து வயதிலெந்தன் பாலகனு நாறுமுழம்
மற்றொருவர் தஞ்சமில்லை மன்னவனே யென்றழுதாள் ௭௧௫௨

என்னைவிட்டுப் போனீரே யெப்போ துனைக்காண்பேன்
மன்னவரேயென்று மாரடித்தாள் மாமயிலாள் ௭௧௫௩

சகலபே ரோடும்வந்து தான்மடிந்தீர் மன்னவரே
அகலவே நின்றுக்கா லனியாயம் வாராதே ௭௧௫௪

பகலில் நரியோடு பாற்றிழுக்கப் பட்டீரோ
இகலிற் பேய்களு மிழுக்கத்தான் பட்டீரோ ௭௧௫௫

பளிங்கிமா மண்டபமும் பாழ்கிடக்க நானிருந்தேன்
ஒழுகி நடந்திலையோ யுற்றதுணை யென்கணவா ௭௧௫௬

சிபாமே புன்தேசஞ் சென்றாளப் போறதெவர்
ஆமா தனக்கொதுவி லைசாளப் போறதெவர் ௭௧௫௭

தாலி யளித்திட்ட தம்பிரான் தானில்லையோ
ஆலிபகை யாகாதென அப்போது சொன்னேனே ௭௧௫௮

ஆண்டிபா தேசியர்க ளெங்கிருந்து தேடுவரே
மாண்டீரோ ஆலிகையால் மன்னவரோ என்றழுதாள் ௭௧௫௯

நாலுமுழத் தாலிகையால் நவில்நீர் மடிபொழுது
பாலும்பழ முமபொசித்துப் பண்பாக நானிருந்தேன் ௭௧௬௦

மண்டபமு மாளிகையு மற்றுமுள்ள நற்சிறுப
கண்டவர்க்குத் தானமெனக் கையளித்து விட்டீரோ ௭௧௬௧

கையெடுத்த புத்தனைத்துங் காட்டிற்றே ஆலிபிடம்
மெய்யெடுத்த நஞ்சடல மேதினியி லேபுரள ௭௧௬௨

பஞ்சணையிற் றூங்குகின்ற பாரவுட லிப்போது
அஞ்சுமணற் புழுதி லானீரோ வென்னரசே ௭௧௬௩

பட்டபடுகளத்தைப் பார்த்தென் வயிறெரியக்
கட்டபது செய்தாரோ கந்த ளபியருக்கா ௭௧௬௪

குறிகாரர் சொன்னதெல்லாங் கேளாவேநீர் கேட்டிலையோ
அறியாமல் வந்தீரோ யாலிகையின் மூர்ளுவென ௭௬௫

பொல்லாநிமித்தமதைப் புத்திதனி லெண்ணிலையோ
அல்லாத போர்களைப்போற் காவலரோ மாண்டீரோ ௭௬௬

குஞ்சரத்தி லேறுமப்போ குஞ்சரஞ்சைகை காட்டிலையோ
நெஞ்சினிற் றருகா நேரமது விட்டிலையோ ௭௬௭

பொல்லாக் கனவுகண்டேன் போகாதீ ரென்றேனே
நில்லாமல் வந்தீரோ நேசரலி வாட்கிரையால் ௭௬௮

ஆனையிழந்தீரோ பருகருகும் பாழாச்சே
தானையறுபோச்சே தையல்மார் தாலுச்சே ௭௬௯

கல்நெஞ்சுக் காரவலி கைவாட் பகைபாசசே
வல்நெஞ்ச ரோடெதிர்த்து வாளாலே விட்டீரே ௭௭௦

பொன்முடியுந் தான்போச்சே பூபதியே யென்றழுதாள்
என்படிமேற் சாய்ந்திருக்க வெப்போது காண்பனினி ௭௭௧

எழுவாள் விழுந்திடுவாள் ஏங்குவா ளேந்திழையாள்
அழுவா ளருண்டிடுவா ளாலியெங்கே யென்றிடுவாள் ௭௭௨

மைந்தனைத்தான் கட்டியிந்த வாறுசொல்லி யேயழுதாள்
பைந்தலைவாய் மண்டேகம் பற்றினபோ லானேனே ௭௭௩

நபியு மிரங்கிலையோ நால்பேருந் தாவிலையோ
புவியிலுள்ள வாலயமும் பொய்யாச்சோ சாமிகளும் ௭௭௪

பொல்லாத புத்தனைத்தும் போட்டுவிட்டிங் கேமானே
நல்லாகக் கொண்டுவீரோ நாடாளு மன்னவரோ ௭௭௫

அடியா ளிருக்கவிங்கே யரசேநீர் மாண்டீரோ
கொடியா ளினிநான் கோமானே யெங்கிருப்பேன் ௭௭௬

ஊரிலுள்ள மங்கையர்க ளொக்கவு மங்கிலியாம்
வாரியுங்கை கொள்ளாதேனை மன்னவரோ என்றழுதாள் ௭௭௭

இந்தவுபாமினி யெப்போது நான்காண்பேன்
அந்தமதின் குந்தமைப்போ லார்காணு மன்னவரே ௭௭௮

பொன்னகரி பாழாச்சே பூமானே என்றழுதாள்
என்விதியிங் காரறிவா ரென்னரசே யென்றழுதாள் ௭௭௯

பொறுதி பொறுத்திலையோ போரலிங்கே யென்றழுதாள்
அறுதியென வந்தீரோ ஆலியுடை வாள்தனக்கு ௭௮௦

நாய்நரி பேய்கள் நடுக்களத்திற் சூழ்ந்திருக்கக்
காயுதே மேனி கத்தனே யென் றழுதாள் ௭௮௧

இனித்தேன் மலரணைமேற் றஞ்சமில்லை யென்னரசே
இனித்தானு னெங்கிருப்பே னென்னரசே யென்றழுதாள் ௭௮௨

சனியன் தொடர்ந்தானோ தாம்வார போதுமைதான்
பனியும் வெயிலும் பாங்குடலி லேவிழுக ௭௮௩

பள்ளி யறையும் பளிங்கிமா மண்டபமும்
தெள்ளிய பொற்றாண் சிந்திருக்கு மண்டபமும் ௭௮௪

சிங்கார மேடைகளும் சிறந்தகொலு மண்டபமும்
பொங்கியிருப்பதிரிற் புரந்திருப்ப தாரரசே ௭௮௫

ஆசையுடன் தினி லாகிலையோ வெம்மரசே
பூசைபண்ணித் தான்வணங்கும் புத்தக ளத்தனையும் ௭௮௬

சண்டாளத் தெய்வமது தன்வாயில் மண்போட்டு
கண்டுக சமானை நாயகரே கொண்டிலையோ ௭௮௭

தன்னெட்டி சாமியெனக் கையாரக் கண்டோமே
எப்பட்டுக் கொண்டீரோ பேர்தலலி கைதனிலே ௭௮௮

சமைய மதிந்துதப்பத் தன்மதியும் பாழாச்சோ
இமையும் விழியுமென வெண்ணியிருந் தேனுமைநான் ௭௮௯

நாடியிருந் தேனுமைநான் நாயகரே யெப்போதும்
வாடிமெலிய வருத்திநீ ரென்னரசே ௭௯0

நானே மடிந்திடுவேன் நன்மகனுங் காதரவார்
மானைப் பிணைமீண்டு முகம்மதிடம் போவெனன ௭௯௧

பிள்ளை தனையெடுக்கிப் போக மதித்துடனே
கிள்ளைமொழி யாளங்கு கிலேசமுட னேகினளே ௭௯௨

பள்ளி தனிலிருந்தார் பாங்கருடன் நபிதாம்
துள்ளிநடை கொண்ட மங்கை துய்யநபி முன்புவந்து ௭௯௩

மகனைவிட்டுக் கொண்டே மங்கைதா னேயழுதாள்
கதனைப் படைத்தவொரு கத்தனரு ளார்நபியே ௭௯௪

மன்னவனைக் கொல்ல மருகருடன் சொன்னீரோ
என்னவகை பால்அலி என்புருட னைவதைத்தார் ௭௯௫

அபூபக்க ரும்உமரு மானஉது மான்அலியும்
சபூறனைவ ரெல்லாம் தான்சூழ்ந் திருந்திடத்தில் ௭௯௬

மங்கைதனைக் கண்டே மயங்கினார் மேருவென
திங்கிலே யிவளிருந்தாள் என்றுமலைத் தேயிருந்தார் ௭௯௭

அப்போ தலிபார்தா மங்கவள்வாய் பார்த்திருந்தார்
செப்பா முலையாளுஞ் செங்கைகமுகத் தேயறைந்தே ௭௯௮

உங்களுட நீதமிதோ உங்கள்பெய ரோ அலிகாண்
எங்களுட தேசமதில் இல்லையோ ஆண்பூடு ௭௯௯

மைப்படியுங் கூந்தலிள மங்கையாள் தானழுதாள்
இப்படித்தான் செய்வீரோ எற்குமோ எல்லவர்க்கும் ௮00

சந்தன் கணவனைநீ ரிப்படிக்கொல் லத்தகுமோ
நாந்தனுடை நீதமிதோ நுந்தம்பெயு ரோ ஆலிகாண் ௮௱௧

வெட்டிப் பிளந்தீரோ வேடிக்கையோ தானுமக்குத்
தட்டிப் பறையவொருத் தலைபுமே கண்டிலையோ ௮௱௨

சமானே யின்றுகொள்ள இன்னஞ்சில நாளிருந்தாற்
கோமாதான் கொண்டிடுவார் கோரல்செய்திரொன்னபலன் ௮௱௩

புறக்காநல் வேதமதின் பொறுதியே செய்யாமற்
சறுக்காது மன்னவனைத் தாண்பழிதான் செய்திரோ ௮௱௪

அந்தந்த வேதமதில் அவரவர்கள் தானிருப்பார்
நுந்தமுட வேதமது நுங்களுக்குத் தான்அருமை ௮௱௫

அடர்ந்துபடை வெட்டுதற்கிங் கார்பொறுப்பா ரிக்கொடுமை
தொடர்ந்துபடை வெட்டுதற்குச் சொல்லுவரோ ராஜாக்கள் ௮௱௬

தானண்ட தேசமதிற் றானிருப்பர் ராஜாக்கள்
வானண்ட தேவர்களும் வன்கொடுமை செய்வாரோ ௮௱௭

கலியோ அலியேதுள் நைவான்மட் டோவாள்காண்
மலிவான ராஜாக்கள் மாநிலத்தில் வேறிலையோ ௮௱௮

என்புருடர் நுஞ்சீரத் திப்போதிற் சாய்ந்தாக்காற்
றென்புபட்டு நீறு யிடைகுவீர் நீரலியே ௮௱௯

நீதியுடையநபி நேர்வரிசை யாற்பிழைத்தீர்
ஆதியுமைக் கேளாதே அநியாயஞ் செய்தீரோ ௮௱௰

வீண்பழிகள் செய்தீரோ விட்டிடுமோ சாயிநம்மைக்
காண்பநுதான் மெத்தவுண்டுங் கண்சிறிது கண்டீரோ ௮௱௰௧

இப்பழிநும் பிள்ளைகளை எப்போதும் விட்டிடுமோ
தப்பிதங்கள் செய்தீரோ சண்டாள ரானீரோ ௮௱௰௨

உந்தன் இடமறிவேன் உள்ளிரக்க மற்றீரோ
தொந்தப்பழி கொண்டீரோ துய்யவனுக் கேற்றிடுமோ ௮௱௰௩

தாறுமுழப் பாலகனை நோக்கியவர் தாம்வளர்ப்பார்
ஆறுதலாம் பாலனுக்கிங் கார்தந்தை யாரினிமேல் ௮௱௰௪

கட்டாண்மை செய்தீரோ காடாச்சே யெங்காம்
ஒட்டாது கொன்றீரோ உங்கித மோஅலியே ௮௱௰௫

விட்டேனே நும்மையினி வீண்பழிகள் கொண்டீரோ
மட்டி லடங்கிலையே மாமன்னிவ் வேந்தனுக்கு ௮௱௰௬

நல்நல் பகைபாகத் துட்சனைகள் செய்திடுமோ
நல்புக்கறுவாளுந் துண்டப்பட வெட்டிடுமோ ௮௱௰௭

கப்பர்பகைத் தென்னுடைய காவலனைக் கொல்வதுவோ
இன்பமுள்ள பாத்திமத்தங் கேற்றதுவா ஆனதுவோ ௮௱௰௮

தன்புருடர் தங்களுக்குத் தக்கதொரு விராமல்
முன்பு தவராகிருந்த மோசமதுதானிதுவோ ௮௧௯

நாயனலி யானுக்கால் நடுக்கேடு செய்வாரோ
தாயப் பெலமோ கண்டமட்டும் வெட்டுமீர் ௮௨௰

நசிகட் காசரிவை நன்றென்று சொன்னாரோ
சபிகைக் குடைநபிதான் கண்டிருக்க வெட்டுவரோ ௮௨௧

ஆலநபி வாளெடுத்தால் ஆராலுந் தாங்கரிது
காலவர் பார்த்திருக்க தானுமக்கு வேகமென்ன ௮௨௨

ஓர்பிடிமண் போதும்நபிக் குர்றப்பட வெல்வதற்கு
ஆர்பொறுப்பா ரிக்கொடுமை யாலனபி யேபாசே ௮௨௩

பொறுமைக் குடையஅபூ பக்கர் பொருந்திருக்க
நறுமெய் மிகவுள்ள நல்லோர் பொறுத்திருக்க ௮௨௪

வலுமைக் குடையஅலி வன்கொடுமை செய்தாரோ
கலவைத் தவிராத ராஜசிங்க மென்றுரைக்கும் ௮௨௫

கத்தா மகனுமரு கன்னாரைப் பார்த்திருக்க
வித்தாரமானவலி வீண்பழிகள் செய்தாரோ ௮௨௬

உதுமானாங்க னுன்மையாய்ப் பார்த்திருக்க
எதுவா யலிக்கிருந்த தென்புருடனை வதைக்க ௮௨௭

எண்ணவொண்ணாப் பேரிருந்து மிக்கொடுமை செய்தாரோ
பண்ணுன தற்குடையோரா பயகாம்ப ரல்லவோதான் ௮௨௮

சாகா வரங்கொண்டோர் தானுண்டோ பூமியிலே
ஆகாதுசெய்தாரோ அலிப்புலிதான் நீதமிதோ ௮௨௯

வேதநபிக் கலது வேறவர்க்கு வேகமென்ன
நீதமுட னெங்கும் நிரஞ்சனனுப் நித்தியனாய் ௮௩௰

நாயன்கொல்வ தற்கனுப்பும் நன்றுன ஆயத்துண்டோ
நேயமுட னுருமிந்த நெட்டூரஞ் செய்வாரோ ௮௩௧

ஆலத்துக்கெல் லாமரசர் ஆலநபியே கேட்பீர்
நால்பேரி லேயொருவர் நானறிவேன் நன்னபியே ௮௩௨

ஆகொடுமை செய்நேர மரியபெரி யோரிலையோ
பாகொடுமை வருந்திற் பார்ப்பமே அவர்சமர்த்தை ௮௩௩

எளிவையாய்த் தானிருந்தே யிந்தச்சமர்த் தானதென்னே
பழியெல்லா மேற்றீரே பத்தாவைக் கொன்றீரே ௮௩௪

ஏறுகின்ற வாம்பரியும் ஈடுசெய்யு மாயுதமும்
தாறுவருத் தும்நந்தஞ் சோராத கைவீரனும் ௮௩௫

ஊறுமுந்தன் வீரப்பட்ட முள்ளவுந் தானிழந்து
வெறுங்கையுடனிருக்க விளம்புநாள் வாராதோ ௮௩௬

கறுங்கற் புபத்தாளர் கபியுந்தன் தாண்டுவோ
வெறுங்கையாய் விட்டேனே பேதினிதி லென்னசெய்வேன் ௮௬௭

ஆகையால் லிவ்வளவு மானபெல னுந்தேயக்குப்
போகநாள் வந்தாக்காற் போகுமோ இப்பழிகாண் ௮௬௮

பெண்ணு ணுரைத்ததெல்லாம் பேசாதலி கேட்டிருந்து
அன்னுணர்ந்து பார்த்தாங் கவர்முறுவல்கொண்டிருந்தார் ௮௬௯

புவியில்வரு மங்கையர்க்குப் போரலேயுங் கேநுசொல்வார்
செவிதனிறையின் செய்கைக்காரொன்றியுவார் ௮௭௰

கலங்காமல் நங்கபிதான் காரிகையைப் பார்த்துரைப்பார்
நலங்கொள்ளிறை தானேநானிலத்தி லேவிடுக ௮௭௧

வந்தவிதி வந்தாக்கால் மனதுபொறு மாதேநீ
சொந்தமுள்ள வுன்பதியிற் சேர்வி லரசாளு ௮௭௨

உந்தனுட தேச மெல்லா முன்மனதுக் காமலது
அந்தமுடன் கலிமாச்சொல் அன்பாக வென்றுரைத்தார் ௮௭௩

உறவுவரும் அலிக்கிங் குற்றுநீ சொன்னதெல்லாம்
அரசு செலுத்தும்அலிபங்கயைத் தேடாதே ௮௭௪

பெண்பழியென் றேஅலிதான் பேசாமற் கேட்டிருந்தார்
நண்பமலி தம்பகையை நாள்தோறுந் தேடாதே ௮௭௫

கோலமுடன் படையைக் கூட அனுப்பிவிப்பேன்
பாலன்றனை யிங்கு பகரச்சொல் கலிமாவை. ௮௭௬

அரசு செலுத்தெனவே ஆண்டலங்கயுந் தானுரைத்தார்
பிரிசமது தேடும் பேரன்ன மீவதுபோல் ௮௭௭

சொன்னமொழி தப்பாமற் தோகையுந்தான் பாலகனை
மன்னர்நபி பதத்தில் மாட்சியுட னேகிடத்தி ௮௭௮

என்புருடனைவதைக்க வகநபிக் கானதல்லாற்
பின்பொருவர் சத்தியுண்டோ பேரலிக்குத் தானெதிரி ௮௭௯

இப்போ பொருந்தாட்ட லென்மகனைத் தான்வதைப்பார்
செப்பமுடன் ஈமானிற் சேருவது நன்றெனவே ௮௮௰

நேருடனே ஈமானை நிச்சயமாய்க்கொள்கவென்றாள்
பாரறிய ஈமானைப் பாலகனங் கோதினனே ௮௮௧

வடித்துக் கனாத்திசுலாம் வாழ்த்திமிகப் படித்தான்
படித்த முறைகளைத்தான் பாரோர் மகிழ்ந்தனரே ௮௮௨

சீருடைய ஆரைநகர் சேர்ந்த முசிலிங்களிலே
ஆரும் நிகரொவ்வாத அருமதுதன் புத்திரனும் ௮௮௩

பேர்பெரிய ராவுத்தப் பிள்ளைபெரியோனருளும்
ஆரவே பெற்றிங் கவன்கிளைதான் வாழியவே ௮௮௪

போர்க்களத்தி லிமான் புகுந்தபே ரத்தனையும்
ஊர்க்குபோ மாமயிலே யுகதனை சாவெனவே ௮௬௫

நல்லநபி சொன்னவுடன் நாடியெழுந்தாள்பதிக்கு
அல்லலகல் பெண்ணேநீ யாருந்தி னென்றுரைத்தார் ௮௬௬

நீயென்ற சொற்கேட்டுச் செப்புவாள் மாமயில்தான்
கோனே நபிக்காசே கூறுவேன் ஓர்வசனம் ௮௬௭

மகன்சமான் கொண்டானே மன்னவரோ போதாதோ
நகமதிற் புனலழைத்த நபியிது சொல்லலுற்றார் ௮௬௮

தாய்மகனு மாளுலுந் தன்வயி வேறுளதே
நேயமுடன் கலிமா நிச்சயமாய்ச் சொல்லுமென்றார் ௮௬௯

கூறுமொழி தான்கேட்டுக் கோதையிந்தி றுகிவிட்டாள்
பேறுபெறு வாய்மாதே பேர்தளமுந் தான்கூட்டி ௮௭௰

நாடுதனிற் செல்லெனவே நாயியுந் தானுரைத்தார்
வாடுமனந் தானீக்கி வண்மைபலி யைப்பார்த்தாள் ௮௭௧

அலியா ருரைத்திடுவா ரன்னமே யுன்மனது
சலியாதே முன்னெழுத்தைத் தப்புவரோ ஆரென்கிலும் ௮௭௨

எத்தனையோ புத்தியுனக் கேற்றமண வாளனுக்கு
மெத்தவாரன் சொன்னேன் பேட்டியாய்த் தானிறந்தான் ௮௭௩

அவனிதனி லிவ்வளவே யாளுந்ரளென் திருக்கிற்
புவனிதனி லிருக்கப்புத்தியுண்டோ மானிடர்க்கு ௮௭௪

மனது கலங்காதே மன்னனிறந் தானெனவே
உனது நின்வைப்பரங் குன்னயவுந் தெங்குமுண்டும் ௮௭௫

உன்னகரி லேசேர்ந்தக் குளநகரை யாண்டிருநீ
என்னவிதம் வந்தாலு மெந்தனக்கிங் காளனுப்பு ௮௭௬

ஆனபொழுதிந்தனக்கிங் காதியுயிர் தந்தானேல்
நானுஞ் சலித்திடலே நாடுவே னுன்னகரம் ௮௭௭

வந்துவினை தீர்த்திடுவேன் வல்லோ னுதவியினுல்
அந்தமுள சொர்க்கமுனக் காகவென வேனினைத்தால் ௮௭௮

உந்தன்சமான்தா னொருக்காலுந் தப்பாமற்
சுந்தரமாய் நில்லெனவே சொன்னு ரரசாலி ௮௭௯

அலிபுலி சொன்னவுட னிழைதா னப்போது
சோலியெல்லாந் தான்தவிர்த்துத் துய்யநபி தாள்பணிந்து ௮௮௰

புலிஅலிபைத் தான்பணிந்தே யேந்தவரைத் தாழ்ச்சிசெய்து
சலியாத ஆலகறி தம்மைமிகப் போற்றிசெய்து ௮௮௧

நாற்பத்தீ ராயிரரை நன்றாகத் தழ்ச்சிசெய்து
ஆறபத் துடனிருந்த அணைக்குதுய லரயகற்றி ௮௮௨

மேலிப்படை யுடனு மெல்லிந்தா னேநடந்து
ஜலிப்பெருஞ் சேனையுட னெயுக்கவும் தானடந்து ௮௮௩

பாதைவழி கடந்து பல்வனங்கள் தான்கடந்து
வேதையெல்லாம் விட்டொழிந்தே வெற்றிமக னோடவரும் ௮௮௪

கூடும் படையுடனே கோதையுந்தன் ஜீபுக்காள்
தேடுாகர மெல்லாஞ் சோத்தீ ணக்கினிந்தாள் ௮௮௫

மருட்டு குருசாணி மற்றுள்ள மண்டலமும்
இருட்டு மிகலுமிலாச் சிந்துமிகப் பொன்மிசுறும் ௮௮௬

[illegible]புரி நடுத்தன் கதிதிமசு தீனிசுலாம்
[illegible]பட்டாங் சிலையியல்லா மானமுட னண்டிருந்தாள் ௮௮௭

இன்னது நீற்கவினி [illegible]திராயன் தன்படைப்போர்
மன்ன வுரைத்திடுவார் மாநிலமெல் லாம்வாழ்க. ௮௮௮

[illegible]இபுனியந்தன்படைப்போர்.

முற்றிற்று.